தொகுதி 8 எண் 3
Vol. 8 No. 3

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

ஆனி - புரட்டாசி 2051
July - September 2020

ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

***Published by***

**RAJA PUBLICATIONS**

**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

25

தொகுதி 8 எண் 3
Vol. 8 No. 3

ஆனி - புரட்டாசி 2051
July - September 2020

ISSN : 2321 - 984X


| | | | |
|---|---|---|---|
| 1. | ந. பூமதி | கல்கியின் நாவல்களில் அரசியல் சிந்தனைகள் | 1-5 |
| 2. | ஆ. ரஞ்சனி & க. முருகேசன் | ஜெயசக்தியின் "நானொன்றும் நீயென்றும்" புதினத்தில் மேம்படுத்தப்படும் சகோதர சகோதரி உறவுகள் | 6-11 |
| 3. | த. ஷீபா & மா. கார்த்திகேயன் | தனிப்பாடல்கள் வாயிலாக அறியவரும் கம்பர் மற்றும் காளமேக புலவரின் வாழ்க்கை நிலை மற்றும் பண்புகள் | 12-17 |
| 4. | S.R SHREE SUBRADEEPPAN & S. SALEEMA RABIYATH | AANDAVAN KATTALAI: THE AESTHETICS OF NEOREALISM CINEMA | 18-23 |
| 5. | பா. அன்புமுகன் | ஆன்மா நலன் பற்றி திருமந்திரத்தின் விளக்கம் | 24-31 |
| 6. | ச. ஜோதிமுத்து | மதுரை மக்களின் நம்பிக்கைகள் | 32-37 |
| 7. | J. BENJAMINE | CONSTRAINTS IN TRIBAL EDUCATION: A STUDY OF PAHARIA TRIBAL STUDENTS IN JHARKHAND | 38-46 |
| 8. | இரா. ஜெயலெட்சுமி | மனுஷ்யபுத்திரன் கவிதைகளில் பெண்ணியம் | 47-52 |
| 9. | ப. கணேஷ்வரி | ஆறாம் வேற்றுமை உருபும் உடைமைப்பொருள் கட்டமைப்பும் | 53-56 |
| 10. | இரா. செல்லமுத்து | காப்பியங்களில் சமணர்களின் அறிவியல் சிந்தனைகள் | 57-62 |
| 11. | க. சங்கீதா & கா. சிவகாமி | கவியரசர் முடியரசனின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள் | 63-66 |
| 12. | ILM. MAHIR | THE CONTRIBUTION OF PERSONALITY DEVELOPMENT TOWARDS THE HUMAN DEVELOPMENT PROCESS – A PSYCHOLOGICAL ANALYSIS OF DEVELOPMENT | 67-73 |
| 13. | க. துர்காதேவி & பா. ஷீலா | சோழர் கால கல்வெட்டுகள் காட்டும் துர்க்கை வழிபாடு | 74-77 |
| 14. | மு. நந்தினிதேவி & அ. கலீல் ரெஹ்மான் | ச.விஜயலட்சுமியின் இலக்கியப் படைப்புகளில் பெண்ணியம் | 78-84 |
| 15. | தா. நா. பாலு | இலக்கியங்கள் சொல்லும் ஊழ்வினைகள். | 85-89 |
| 16. | ர. சங்கமேஸ்வரன் | கொங்கு வேளாளரின் நீர் மேலாண்மை | 90-96 |
| 17. | K. வைத்தியநாதன் & நா. தாமோதரன் | குருவருள் நமக்குத் திருவருள் | 97-103 |
| 18. | சு. பாத்திமா | தொடரியல் நோக்கில் வேற்றுமை மயங்கியல் | 104-110 |
| 19. | C. அமுதன் & சத்தியபாமா | பாவண்ணனின் எழுத்துமுறை | 111-119 |
| 20. | S. பாலின் செல்வ ஷோபா | வானம்பாடிகளின் கலக அழகியல் | 120-127 |
| 21. | ஐ.எல்.எம். மாஹிர் | மனிதர்களது உயிரியல் நடத்தைகளும் கற்றல் விருத்திச் செயன்முறை மாற்றங்களும் - ஒரு கல்வி உளவியல் பகுப்பாய்வு | 128-136 |
| 22. | ப. ராஜசேகர் | தனிநாயகம் அடிகளாரின் தனித்துவம் | 137-140 |
| 23. | கா. பாலமுருகன் & ஆ. நாகராசன் | சிவகங்கை மாவட்ட நரிக்குறவர் இனமக்களின் வாழ்க்கை வட்டச்சடங்குகள் | 141-145 |
| 24. | வெ. முரளிதரன் | ஏழாம் திருமுறையில் குறிஞ்சி நிலத்தின் திணைக் கோட்பாடுகள் | 146-149 |
| 25. | சி. கோபி & மு. அருணாசலம் | தமிழ் - கிரேக்கப் பண்பாடுகளில் சகுனமும் நம்பிக்கையும் | 150-155 |
| 26. | கா. பிரியா | பி. விருத்தாசலனாரின் பதிப்புப் பணிகள் | 156-160 |
| 27. | த. சங்கர் & ம. பூபதி | கந்தர்வன் சிறுகதையில் பெண்கள் நிலை வெளிப்பாடு | 161-170 |
| 28. | வ. தங்கதுரை & ம. பூபதி | சீவகசிந்தாமணியில் காணப்படும் அறிவியல் செய்திகள் | 171-177 |
| 29. | சு. இராசாராம் & வே. ரோஸ்கீதா | சி. ஜெகந்நாதாசாரியரின் பத்துப்பாட்டு உரைத்திறன் | 178-184 |
| 30. | எம்.எஸ்.எம்.சலீம் | அப்பாஸியக் கால அரபு கவிஞர் புஸ்தூரியின் கவிதைகள் பற்றிய விமர்சன ஆய்வு | 185-194 |
| 31. | இ.வேதவள்ளி & ந. கிருஷ்ணவேணி | "இன்று பிரியும் நாள்" - நூலின் உள்ளடக்கமும் பொருண்மையும் | 195-199 |
| 32. | சு.செல்வகுமாரி & இரா. திராவிடராணி | சிலப்பதிகாரம் காட்டும் நிலத் தெய்வங்கள் | 200-204 |
| 33. | J.D. PATRISHIYA FERNANDO | VESTIGES OF PADI (THIRUVALIDAYAM) | 205-211 |
| 34. | வ. விஜயலட்சுமி | சங்க இலக்கியத்தில் தமிழர்களின் நம்பிக்கையும் பழக்க வழக்கங்களும் | 212-217 |
| 35. | பி. ரெஜினா & ஜோ. எப்சிபா | திருத்தொண்டர் காப்பியத்தின் கதைக்கரு | 218-225 |
| 36. | ச. கல்பனா | சங்க கால தமிழ்ச் சமூகத்தின் காதற் சிறப்பு | 226-234 |
| 37. | வெ.சங்கரநாராயணன் & ந. மாணிக்கம் | அகத்திணை மரபுகளும் ஆழ்வார்களின் இறைநெறிக் கொள்கைகளும் | 235-240 |
| 38. | எஸ்.வீரப்பன் & எஸ்.சேகர் | உடலோம்பலின் அவசியம் | 241-249 |
| 39. | ரா. ராமேஸ்வரி | இலக்கியங்களில் விருந்தோம்பல் | 250-253 |
| 40. | கு. பிரகாஷ் | பழந்தமிழரின் அரசியல் அறிவு மரபு | 254-259 |
| 41. | வை. கார்த்தி | 'ஆழிசூழ் உலகு' புதினத்தில் மரணப் பதிவுகள் | 260-265 |
| 42. | மா. அபிராமி | புவி வெப்பமடைதலும் மாணவர்களின் புரிதல்களும் - ஒரு ஆய்வு | 266-273 |
| 43. | இரா. மூக்காயி & ச. இராமமூர்த்தி | முல்லைநில வேளாண்மை | 274-280 |
| 44. | சு. இராசாராம் | வீறுகவியரசர் முடியரசனாரின் தமிழ் உள்ளம் | 281-287 |
| 45. | ச. யோகச்சந்திரன் & வீ. வெற்றிவேல் | கீழ்க்கணக்கு அறநூல்களில் மனித நேயச் சிந்தனை | 288-294 |
| 46. | சி. மணிமேகலை | பழமொழி நானூறு சுட்டும் தமிழர் உணவுமுறை | 295-299 |
| 47. | K. SUCHITHA & I. MUTHUCHAMY | A STUDY ON ACADEMIC ACHIEVEMENT OF ELEMENTARY TEACHER TRAINEES IN RELATION TO THEIR MULTIPLE INTELLIGENCE | 300-305 |
| 48. | K. MANIVANNAN | HISTORY OF THIRUMANANJCHERRI SRI UTVAHANATHASWAMY TEMPLE AT MAYILADUTHURAI TAMIL NADU | 306-312 |
| 49. | ஜே. சுசிதாரோஸி & கு.ர. சரளா | இமையத்தின் படைப்புகளில் கல்வியும் பள்ளியும் | 313-318 |
| 50. | S. CHITRA & I. MUTHUCHAMY | EFFECTIVENESS OF INTERVENTION STRATEGIES IN ENHANCING ACHIEVEMENT AMONG HIGHER SECONDARY STUDENTS IN ECONOMICS | 319-324 |


Published by : **Raja Publications**, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House**, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# தொடரியல் நோக்கில் வேற்றுமை மயங்கியல்

**முனைவர் சு. பாத்திமா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை & ஆய்வு மையம்,
அரசுக்கல்லூரி சித்தூர், பாலக்காடு, கேரளா-678104, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்மொழி ஐந்திலக்கணத்தையும் தன்னகத்தே கொண்டு தலைநிமிர்ந்து நிற்கும் மொழி. அவற்றை எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரமாக வகுத்து, தெளிவுறுத்தும் மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியமாகும். இதற்குப் பின் தோன்றிய நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், வீரசோழியம், சுவாமிநாதம் போன்ற நூல்கள் ஐந்திலக்கணங்களையும் விளக்கிசென்றிருப்பினும் தொல்காப்பியத்திற்கு இணையாகாது என்பதை அறுதியிட்டுக் கூற இயலும். தொல்காப்பியத்தின் ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது. தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் விரிவுபடுத்திய ஒன்பது இயல்களின் முதல் நான்கு இயல்களில் தொடர்மொழிகளின் இயல்புகளையும் அவற்றிலமைந்துள்ள சொற்களின் இயல்புகளை விளக்குகின்றார். பின்னர் வரும் நான்கு இயல்களில் தனிச்சொற்களின் இலக்கணத்தைக் கூறி எஞ்சியவற்றை இறுதியியலில் கூறிமுடிக்கின்றார். தொடரில் சொற்கள் வரும் முறைமையை தொல்காப்பியர் தமக்கே உரிய பாணியில் விளக்கியிருப்பது அதன் தனிச்சிறப்பாகும். இதனை மொழியியலாரின் தொடரியல் நோக்கில் வேற்றுமை மயங்கியலை ஆய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்காகும். இவ்வாய்விற்கு முதன்மைச் சான்றாதாரமாகத் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**முன்னுரை**

தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்தின் முதல் இயலாகிய கிளவியாக்கத்துள் அல்வழித்தொடர் குறித்துக் கூறப்படுகிறது. அதனை அடுத்து வரும் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய இயல்களில் வேற்றுமைத் தொடர் குறித்துக் கூறப்பட்டுள்ளன. ஏனைய இலக்கண நூல்கள் யாவும் தனிச்சொல்லின் இலக்கணத்தைக் கூற தொடரில் சொற்கள் வருவதைக் குறித்து கூறும்போது சொற்களின் உறவுநிலைகளை விளக்குவதே தொடரியல் என்று மொழியியலாளர்களும் விளக்கம் தருகின்றனர். இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஓர் இலக்கண நெறிமுறையைத் தொல்காப்பியர் பின்பற்றிச் செல்வதைக்கொண்டு அவரது தொடரியல் நோக்கு வெளிப்படுகிறது.

**வேற்றுமை-வேற்றுமை மயக்கம்**

பெயர்ப்பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை என்பர். ஆகவே வேற்றுமை பெயர்க்குரிய இயல்புகளுள் ஒன்றெனக் கருதப்பட்டது. சொற்றொடர் மரபுகளை கிளவியாக்கத்தில் கூறிய தொல்காப்பியர், சொற்றொடர் அமைப்புக்கு பெரிதும் இன்றியமையாதனவான வேற்றுமையை அடுத்த இயலிலே விளக்கிய பின் வேற்றுமை மயங்கியலில் உருபுகள் தொடர்ந்து அடுக்கி வருதலையும் புதை நிலையில் உருபுகள் மயங்கி கிடப்பதையும் குறிப்பிடுவதன் வாயிலாக தொல்காப்பியர் தொடரியல் நோக்கு மிக்கவர் என்பதை உணரலாகும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு தமிழில் ஏழு வேற்றுமைகளே கொள்ளப்பட்டன. விளி வேற்றுமையைத் தனியாகக் கொண்டு ஆராய்ந்து வந்துள்ளனர். தொல்காப்பியரே விளியையும் சேர்த்து வேற்றுமை எட்டெனக் கூறியுள்ளார் என்பதனை.

**"வேற்றுமை தாமே ஏழென மொழிப"[1]**

**"விளிகொள்வதன் கண்விளியோடு எட்டே"[2]**

சிறப்பிதழ்
**Special Issue**


*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*



**13-15 பங்குனி 2052**
**26th - 28th March 2021**

**ISSN : 2321 - 984X**


# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*


Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal


சிறப்பிதழ் : **இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021**
**தமிழ்த்துறை,**
**கேரளப் பல்கலைக்கழகம்**
காரியவட்டம், திருவனந்தபுரம், கேரளா

# பெண் தெய்வங்கள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**


**முனைவர் ஹெப்சி ரோஸ் மேரி. அ**
தமிழ்த்துறைத் தலைவர்



*Published by*

**RAJA PUBLICATIONS**
**10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.**
**Mobile : +91-9600535241**
**website : rajapublications.com**

**17** பகுதி-2
**Part -2**

சிறப்பிதழ்
**Special Issue**

13-15 பங்குனி 2052
26th - 28th March 2021

ISSN : 2321 - 984X


| | | |
|---|---|---|
| 61. க. கல்யாணசுந்தரி | நாக வழிபாடும் நம்பிக்கைகளும் | 341-345 |
| 62. கே. இரா. கமலாமுருகன் | கதைப்பாடலில் மாரியம்மன் | 346-350 |
| 63. காமராஜ். ச | கேரளத்தில் அம்ம தெய்வங்களும் வழிபாடுகளும் | 351-356 |
| 64. து. கனஜா தேவி | சிலப்பதிகாரத்தில் பெண்தெய்வங்கள் | 357-361 |
| 65. மு. கவிதா | தமிழகத்தில் காளி வரலாறும் வழிபாடும் | 362-367 |
| 66. த. கவிதா | தமிஞ்சி வரலாறும் கொண்டம்மன் வழிபாடும் | 368-374 |
| 67. ந. கவிதா | ஔவை: ஔவையாரம்மனான கதை நோன்பும் வழிபாடும் | 375-379 |
| 68. பெ.கவிதா | எட்டு நாட்டுப் பெண் தெய்வ வழிபாடு | 380-383 |
| 69. ஜோ. கிளம்பி ஜெனி பிரியா | மண்டைக்காட்டு பகவதி அம்மன் | 384-389 |
| 70. சீ.கோகிலா | தாய்த்தெய்வ வழிபாட்டில் பேச்சியம்மன் | 390-394 |
| 71. க. கௌசல்யா தேவி | தமிழ் இலக்கியங்களில் பெண் தெய்வ வழிபாடுகள் | 395-399 |
| 72. சோ.கிருஷ்ணமூர்த்தி | கணியான் கூத்துக் கதைப்பாடலில் இசக்கியம்மன் தெய்வத் தோற்றக் கதை | 400-402 |
| 73. ஜா.குழந்தை தெரஸ் | புதினம் இலக்கியத்தில் பெண் தெய்வத் தோற்றக்கதைகள் | 403-407 |
| 74. லஷ்மி. சி | பெண் தெய்வ தோற்றக் கதைகள் - ஆற்றுக்கால் பகவதி அம்மன் | 408-412 |
| 75. க. லட்சுமி | பெண் தெய்வ வழிபாட்டில் மங்கலம்பேட்டை மங்கள நாயகி | 413-420 |
| 76. ப. லாவண்யா | தாய்த்தெய்வ வழிபாட்டில் சப்த கன்னிகள் | 421-425 |
| 77. க. மகேசுவரன் | பெண் தெய்வ வழிபாடு - எழுத்திலக்கியங்களிலும் வாய்மொழி இலக்கியங்களிலும் | 426-432 |
| 78. கோ. மாலினி | மேல்மருவத்தூரைச் சுற்றியுள்ள பெண் தெய்வங்கள் | 433-437 |
| 79. எஸ்.மணிமாறன் | பிரமசக்தியம்மனின் தோற்றம் | 438-441 |
| 80. இரா.மருதவேல் | வாய்மொழி வழக்காறுகளில் பெண்தெய்வ வழிபாட்டுப் பாடல்கள்- ச. அரசலிங்கம் | 442-448 |
| 81. மா.மாதேஸ்வரி | திராவிட பெண்ணினமும் மனித குல வாழ்வும் | 449-453 |
| 82. மா.மீனாட்சிசுந்தரம் | ஓவர்ச்சேரி பேச்சியம்மன் ஆலயச் சமூகப் பின்புலமும் வழிபாட்டு மரபுகளும் | 454-460 |
| 83. அ. முருகன் | பெண்தெய்வத் தோற்றக் கதைகள் | 461-464 |
| 84. ப. முருகன் | பகவதி வழிபாடும் வாய்மொழி மரபுக்கதைகளும் | 465-469 |
| 85. க.முத்துஇலக்குமி | பண்டைத்தமிழரின் அணங்கு வழிபாடும் பழங்குடி மக்களின் வனதேவதை வழிபாடும் | 470-474 |
| 86. கோ. முத்துப்பாண்டி | வெட்டுடையாள் காளியம்மனின் வரலாறும் முரண்பாடுகளும் | 475-479 |
| 87. து. முத்துசாமி | சீராயி அம்மன் தோற்றமும் வழிபாடும் | 480-485 |
| 88. ப.க. மூவேந்தன் | சமூகநோக்கில் பெண் தெய்வங்கள் (பாரதியார் கவிதைகளை முன்வைத்து) | 486-494 |
| 89. இரா.நாகராணி | பெண் தெய்வங்களின் ஆளுமை | 495-500 |
| 90. கோ.ப. நல்லசிவம் | பெண் தெய்வ வழிபாட்டு மெய்யியல் மரபுகள் | 501-505 |
| 91. மு. நடராஜன் | சங்க இலக்கியத்தில் சக்தி வழிபாடு | 506-510 |
| 92. ஜோ. நெல்சன் | வேதநாயக சாஸ்திரியாரின் "பெத்தலகேம் குறவஞ்சியில்" தேவமோகினி இயம்பும் இறைமாண்பு | 511-516 |
| 93. வெ. நிர்மலா | பெண் தெய்வ வழிபாட்டு மரபுகள் (திரோபதை அம்மன் வழிபாடு - திருத்தணி வட்டம்) | 517-522 |
| 94. வே. நிர்மலர் செல்வி | தமிழர் வழிபாட்டு மரபுகள் | 523-528 |
| 95. கோ. பத்மவிலாசினி | ஒடுப்பறை நாகரம்மன் கோயில் தங்கமை தாயம்மை வழிபாடு (ஏழூர் செட்டு சமுதாய மக்களின் குலதெய்வம்) | 529-534 |
| 96.மு.பரமேஸ்வரி | சங்க இலக்கியத்தில் பெண் தெய்வங்கள் | 535-541 |
| 97. தி. பார்த்திபன் | சாக்த வழிபாடு (Shakthi Worship) | 542-545 |
| 98.ரா.பால்ராஜ் | மாரியம்மன் வழிபாட்டு முறை | 546-550 |
| 99. க.பொற்கொடி | காக்கும் தெய்வம் பெத்தனாட்சி | 551-556 |
| 100.பவுன் ராஜ். பா | ஆற்றுக்கால் பகவதி அம்மன் வழிபாடும் கண்ணகி தொன்மமும் | 557-564 |
| 101.இரா.பிரபாகர் | நாமக்கல் தெய்வங்கள்: பெண் தெய்வ உருவாக்கக் கதைகள் | 565-570 |
| 102.ரா. பிரபு | ஆனைமலை மாசாணி அம்மன் திருக்கோவில் வழிபாட்டு முறைகள் | 571-574 |
| 103.க.பிரேமா | சோழர் கால பெண் தெய்வங்கள் | 575-578 |
| 104.ப.பிரியா | சிலப்பதிகாரத்தில் பெண் தெய்வ வழிபாடு | 579-585 |
| 105.க.பிரியதர்ஷினி & ச.குருஞானாம்பிகா | கேரள வாய்மொழி இலக்கியமான "தோற்றம் பாட்டின்" வழி கண்ணகி கதை | 586-590 |
| 106.ஜெ.ராஜசெல்வி & இர.எழிலி | நாட்டுப்புறப் பெண்தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் | 591-595 |
| 107.ஆ.க.ராஜா | தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வம் | 596-600 |
| 108.இரா. இராமமூர்த்தி | வரலாற்றில் கண்ணகி வழிபாடு | 601-605 |
| 109.இரா.ரம்யாமகேஸ்வரி | சிறு தெய்வ வழிபாட்டில் - மாலைத்தெய்வம் (புள்ளாயி-மயிலாயி) | 606-614 |
| 110.பா.ஜெயகுமாரி | இலஞ்சி வட்டார பெண் தெய்வங்கள் | 615-620 |
| 111.கோ. ரங்கராஜன் | பத்துப்பாட்டில் பெண் தெய்வ வழிபாடு | 621-625 |
| 112.ம. ராணி | ஊர்மேலழகியான் வணங்கும் கரிசல் குளம் "ராசாத்தி அம்மன்" | 626-630 |
| 113.ச. ராதிகா | பெண் தெய்வ அறிமுகமும் புட்லூர் அம்மன் தல வரலாறும் | 631-639 |
| 114.செ. ரெஜினா | ஒருமா மணியாய் உலகுக்கு ஓங்கிய திருமாமணி | 640-645 |
| 115.து. ரேணுகாதேவி | அலவாய்ப்பட்டி செல்லாண்டியம்மன் கோயிலில் ஆலய அமைப்பு முறையும் வழிபாட்டு முறைகளும் | 646-650 |
| 116.ஆ. ரேவதி | நாட்டார் இலக்கியங்களில் பெண் தெய்வங்கள் | 651-654 |
| 117.அ.ரேவதி | மதுரை வண்டியூர் மாரியம்மன் கோவில் வரலாறு மற்றும் வழிபாட்டு மரபுகள் | 655-658 |
| 118.மு. ரேவதி | வேளாண் தெய்வம் மாரியம்மனின் வழிபாட்டு மரபுகள் | 659-663 |
| 119.கு.சங்கீதா | காஞ்சி ஸ்ரீகாமாட்சி அம்மன் | 664-672 |
| 120.மு.சங்கர் | தீதிலா வடமீன் - கற்பின் அடையாளம் | 673-677 |
| 121.பு. சந்தனகுமாரி & ச. மல்லிகா | முப்பிடாரியம்மன் கோவில் வரலாறும் அதன் சிறப்புகளும் | 678-682 |


Published by : **Raja Publications**, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House**, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# பண்டைத்தமிழரின் அணங்கு வழிபாடும் பழங்குடி மக்களின் வனதேவதை வழிபாடும்

முனைவர் க. முத்துஇலக்குமி
இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்
அரசினர் கல்லூரி, சித்தூர், பாலக்காடு, கேரளா, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைத்த்தமிழரின் அணங்கு என்னும் சொல்வழக்காறு சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பயின்றுவருகின்றது. அணங்கு எனும் சொற்றொடர் அஞ்சத்தகுந்த அல்லது அச்சம்தரும் என்னும் பொருண்மையில் வழங்கப்பட்டுள்ளது. அச்சத்துக்குக் காரணமான அணங்கு தம்மைத் துன்புறுத்தக்கூடாது என்ற வேண்டுதலால் வழிபடும் தெய்வமாக மாறுதல் அடைகின்றது. தொடர்ந்து அணங்கு என்னும் அஞ்சத்தகும் இயற்கை சக்தி பெண் தெய்வமாக உருவகப்படுத்தப்படுவதையும் சங்க இலக்கியம் பதிவு செய்கின்றது. பழங்குடி மக்களின் வனதேவதை வழிபாடு அணங்கு வழிபாட்டையொத்த இயற்கை வழிபாடேயாகும். சங்க இலக்கியம் சுட்டும் அணங்கு வழிபாடும் பழங்குடி மக்களின் வனதேவதை வழிபாடும் அச்சம் காரணமாக ஏற்பட்டு பின்னர் தமக்குரிய தெய்வ வழிபாடாக மாறும் தன்மை, அணங்கு, வனதேவதை உறையும் இடங்கள் குறித்த பதிவுகளையும் இவ்வாய்வுக்கட்டுரை விளக்குகின்றது

**கலைச்சொற்கள்:** சங்கைலக்கியம் – அணங்கு – பழங்குடிமக்கள் – வனதேவதை வழிபாடு.

**முன்னுரை**

மனிதனின் அனைத்து மரபு சார்ந்த செயல்களுக்கும் சடங்குகளுக்கும் நம்பிக்கையே காரணமாகும். தொடக்க காலத்தில் இயற்கையின் சீற்றத்தைக் கண்டு அஞ்சிய மனிதன் பின்னர் அவற்றை வழிபடத் தொடங்கினான். இயற்கையின் மீது அவன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு வழிவகுத்தது எனலாம். இடி, மின்னல், புயல், நீர் இவற்றால் துன்பம் அடைந்த மனிதன் வான், மழை, இடி, நீர்நிலைகள், மரங்கள், மலை உச்சிகள் ஆகியவற்றில் கண்ணுக்குப் புலப்படாத ஆற்றல் மறைந்திருப்பதாக எண்ணி அவற்றைத் தெய்வமாக வழிபட்டான். மனிதனின் தொடக்ககால வழிபாடு இயற்கை வழிபாடே. இன்றைய நாளிலும் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டு வரும் பழங்குடி மக்களின் வழிபாடும் இயற்கை சார்ந்தே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. . பண்டைத்தமிழரின் அணங்கு நம்பிக்கையின் தொடர்ச்சியே பழங்குடிமக்களின் வனதேவதை வழிபாடு என்பதை முன்வைக்கின்றது இவ்வாய்வுரை.

**சங்க இலக்கியத்தில் அணங்கு**

சங்க காலத்தில் இயற்கை வழிபாடு நிலைபெற்றிருந்ததை சங்க இலக்கியம் பதிவு செய்கின்றது. சங்கத் தமிழர் அச்சம் தருபனவற்றை 'அணங்கு' என்று அழைத்தனர். அச்சத்தால் ஏற்படும் வருத்தமும் அணங்கு எனச்சுட்டப்படுவதை 'அணங்குறுநரை அறியாதோனே?' (பா. 94) 'அணங்கல் ஓம்புமதி'(பா. 358) எனவும் வரும் நற்றிணைப் பாடலடிகளால் அறியலாம். வருத்தம் தரும் செயல் அணங்கு எனச்சுட்டப்பட்டு, தமக்கு வருத்தத்தைத் தருவன தம்மினும் உயர்ந்த சக்தி, அதாவது தம் சக்திக்கு அப்பாற்பட்டது எனக்கொண்டு கண்ணுக்குப் புலப்படாத ஒன்றாக அணங்கு வணங்கமுற்பட்டதை இச்சான்றுகள் உணர்த்துகின்றன. தான் எய்த அம்பு வேட்டை மிருகத்தின் மீது படாமல் குறி தவறியதற்கு மலை தெய்வத்தின் கோபமே காரணம் என்றெண்ணும் கானவன், மலையின் கோபத்தைப் போக்குவதற்கு

RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s11

# யட்சி சிறுகதையில் பெண்ணாக்கல் அணுகுமுறை

**த. கவிதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம், அரசுக் கல்லூரி சித்தூர், பாலக்காடு-678104, கேரளா, இந்தியா

# Feminine construction in Yatchi Short Story

**T. Kavitha** [a, *]

[a] Department of Tamil & Research Centre, Government College Chittur, Palakkad-678104, Kerala, India

* Corresponding Author: kavithavictoria@gmail.com

Received: 08-01-2021
Revised: 14-04-2021
Accepted: 16-04-2021
Published: 24-04-2021

Check for updates

**ABSTRACT**

'Feminism' has emerged in the Western Countries as a political concept concerned with the welfare of women. Over time the literature evolved into a theory of understanding the depictions of women that women create. Some approaches are needed to understand a theory. Thus, to access literature in a feminist perspective, Vijayalakshmi in her article identified nine types of Feminist attitudes. This article aims to explore how the first of these approaches "Feminine Construction" is found in Jeyamohan`s Short story "Yatchi".

**Keywords:** Feminism, Feminine construction, Yatchi, Women

## முன்னுரை

உலகில் முதற்கண் நிலவிய தாய்வழிச் சமுதாயம் மறைந்த நிலையில் பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து பெண் ஆளப்படும் பாலாக மாற்றப்பட்டிருக்கின்றாள். தந்தைவழிச் சமுதாயம் உருவெடுக்க ஆரம்பித்தவுடன் பெண் தன் சுயத்தை இழந்தாள். அவள் வாழ்வு எத்தகையதாக மாறவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை இழந்தாள். ஏனெனில் அவள் வாழ்வைக் கட்டமைக்கும் உரிமையை ஆளும் பாலாகிய ஆண்கையிலெடுத்துக் கொண்டான். அதற்குத் துணைசெய்யும் விதத்தில் அச்சம், நாணம், மடம் முதலான பண்பு நலன்கள் அவளையும் அறியாமல் அவளுக்குத் திணிக்கப்பட்டன. அதேவேளையில் அறிவுத்திறனும் பெருமையும் ஆணுக்கு அணிசெய்யும் பண்புகளாக எடுத்துரைக்கப்பட்டன. இவ்வாறு எதிர் இணைகளாக அவர்கள் இருவரும் இணைந்து வாழவேண்டிய சூழ்நிலையை மனிதசமுதாயம் உருவாக்கியது. எனவே குடும்பக் கட்டமைப்பில் ஆண் அதிகாரம் செலுத்தும் உரிமையாளன் ஆனான். பெண் அவ்வதிகாரத்தை ஏற்றுச் செயல்படுபவளாக மாறினாள். அந்நிலையில் பெண் சமத்துவமற்றவளாக சுதந்திரமற்றவளாக மாறிப்போனாள். ஆணின் பல சௌகரியங்களுக்காக உருவாக்கப்பட்ட குடும்பக் கட்டமைப்பில் பெண் பாலியல் தேவைக்குரிய கருவியாகவும் மனித உற்பத்திக்கான கருவியாகவும் பார்க்கப்பட்டாள். அந்நிலை இன்று வரை மாறாததால்தான் பாலியல் குற்றங்கள் தொடர்கதைகளாக நீண்டு கொண்டே இருக்கின்றன.

கடந்த சில நூற்றாண்டுகளாக பெண்ணுக்கான சுதந்திரம் குறித்து பற்பல விவாதங்கள் பற்பல வடிவங்களில் உருவெடுத்தன. இலக்கியங்களிலும் அவை பதிவாகின. நமக்கான சுதந்திரத்தை நாமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற முனைப்பில் மேலைநாட்டுப் பெண்களால் கையிலெடுக்கப்பட்ட பெண்ணியச் சிந்தனைகள் மனித வாழ்க்கையில் பல சலனங்களை உருவாக்கின. அச்சிந்தனைகள் தீவிரமடைந்த நிலையில் பெண்ணியக் கோட்பாடு உருக்கொண்டது. அக்கோட்பாடு மனித வாழ்வைப்

பிரதிபலிக்கும் இலக்கியங்களை ஆராய்வதற்கும் பயன்பட்டது. இன்றைய பெண்ணியக் கோட்பாட்டாய்வாளர்கள் கிடைக்கின்ற தரவுகளின் அடிப்படையில் ஒன்பது வகையான அணுகுமுறைகளைக் கையாண்டு பெண்ணியத்தின் அடுத்த கட்ட நகர்வை முன்னெடுக்கின்றார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவராக த. விஜயலட்சுமி காணப்படுகின்றார். அவர் அடையாளங்காட்டிய பெண்ணிய அணுகுமுறைகள் பின்வருமாறு,

1. பெண்ணாக்கல்
2. அதிகாரப் பராமரிப்பு
3. பெண் வெறுப்பு
4. பெண்கள் பற்றிய படிமங்கள்
5. இணை எதிர்வுகள்
6. இரண்டாம்நிலைச் செயல்பாடுகள்
7. உடல்புனிதம்
8. பெண்ணிய மொழியியல்
9. பெண் மைய விமர்சனம் (Vijayalakshmi, 2019)

ஆகிய அணுகுமுறைகள் பெண்ணியக் கோட்பாட்டிற்குரிய அணுகுமுறைகளாக இன்று அடையாளப் படுத்தப்படுகின்றன. அவற்றை இலக்கிய ஆய்விற்குப் பயன்படுத்திப் பார்த்தோமானால் இலக்கியங்கள் பெண்களை எவ்வாறெல்லாம் சித்திரித்துக் காட்டுகின்றன என்பதை வெளிக்கொணரமுடியும். அந்நிலையில் விரிவு கருதி படைப்பாளர் ஜெயமோகன் எழுதிய “யட்சி” என்ற சிறுகதையில் 'பெண்ணாக்கல்' என்ற ஒன்று மட்டும் எவ்வாறு நிகழ்ந்துள்ளது என ஆய்ந்து காணும் வகையில் இக்கட்டுரை அமையவுள்ளது.

## பெண்ணாக்கல்

ஓர் இலக்கியத்தை பெண்ணியச் சிந்தனையுடன் அணுக முற்படும்போது சில பெண்ணியலாளர்களின் கருத்துகளில் கவனம் செலுத்த வேண்டியதாகின்றது. அந்நிலையில் இன்றைய பெண்ணிய ஆய்வாளர்களில் ஒருவரான த. விஜயலட்சுமி “ஒரு வர் பெண்ணாகப் பிறப்பதில்லை. சமூகத்தால் பெண்ணாக மாற்றப்படுகின்றார்” என்ற **சிமோன் தி பூவலின்** பெண்ணியக் கருத்தை நாம் முதல் அணுகுமுறையாக எடுத்துக் கொள்ளலாம் (Vijayalakshmi, 2019, p.56) என்று கூறுவதை அவதானிக்க வேண்டியவர்களாகின்றோம். அதாவது மனித உயிரியாகிய பெண் வெறும் பாலியல் அடையாளத்தைக் கடந்து ஆண்களின் வாழ்வியல் வசதிக்கேற்றவாறு பெண்ணாகச் சமைக்கப்படுகின்றாள். ஆண்களின் பொருளாகச் சுருக்கப்படுகின்றாள் என்பது இவ்வணுகுமுறையின் மையப் பொருளாகின்றது. தொடர்ந்து “ஆண்கள் சுயம் (Self) அல்லது தன்னிலை என்ற கருத்து வகையைத் தங்களுக்கே பிரத்தியேகமாக இருப்பதாக உரிமை பாராட்டுவதுடன் பெண்ணை நிரந்தரமான பிறர் (The Other) என்ற நிலைக்குத் தாழ்த்தி வைத்துள்ளனர்” (Vijayalakshmi, 2019, p.56) என்ற சிமோ தி பூவலின் மற்றொரு கருத்தையும் உளங்கொள்வது நல்லது என்று த.விஜயலட்சுமி கூறுவதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளலாம். இவ்விரு கருத்துகளும் ஜெயமோகனின் “யட்சி” சிறுகதையில் செயலாக்கம் பெற்றிருப்பது கண்கூடு.

நம் சமூகத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்த தருணத்திலிருந்து அக்குழந்தையை பெண்ணாக்கலுக்கான பல அடுக்குக் கட்டமைப்பு வேலைகள் அனைத்தும் துவங்கி விடுகின்றன. அலங்கரிப்பதிலிருந்து ஆணுக்குப் பயன்படும் விதத்திலுள்ள பல விஷயங்களைக் கற்றுக் கொடுப்பதிலிருந்து அவர்களுக்கான புழங்கு வெளிகளைத் தீர்மானிப்பதிலிருந்து என ஆணிற்கும் பெண்ணிற்குமான பாரபட்சங்கள் முளைவிட ஆரம்பித்து விடுகின்றன. அத்தகு பாரபட்சங்கள் “யட்சி” கதையில் மிகத் தெளிவாகவே தெரிகின்றன. அதாவது உயிரியல் பெண்ணை சமூகப் பெண்ணாக மாற்றுகின்ற நிகழ்வுகள் அக்கதையில் வெட்டவெளிச்சமாகக் காட்டப்படுகின்றன.

"யட்சி" கதையில் கதை சொல்லியாக வருபவர் ஓர் ஆணாகத் தெரிகின்றார். அவர் வாயிலாக நான்கு தலைமுறைப்பெண்களின் வாழ்வியல் சூழல் புலப்படுகின்றது. பொதுவாக பெண் என்பவள் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டியவள், உடல் புனிதத்தைக் காத்துக்கொள்ள வேண்டியவள், குடும்ப கௌரவத்தைக் கட்டிக்காக்க வேண்டியவள், ஆண்களின் அதிகாரத்தை ஏற்று அனுசரணையுடன் நடந்து கொள்ள வேண்டியவள், ஆண்களின் சௌகரியங்களுக்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கப்பட வேண்டியவள் என்று பலவற்றையும் ஏற்றுவாழ வேண்டியவளாகின்றாள். அத்தகைய பெண்ணாக "யட்சி" கதையில் இடம்பெறும் செம்பகம் என்ற பாத்திரத்தை அடையாளப்படுத்த முடிகின்றது. அச்சமற்றவளாக, அறிவு வேட்கை மிகுந்தவளாகக் காணப்பட்ட செம்பகம் திருமணத்திற்குப் பிறகு ஒரு சராசரி மனைவியாக ஒரு சராசரித்தாயாக மாறிப்போகின்றாள். எனவே தந்தைவழிச் சமூகம் பெண்ணை "பெண்ணாக்கல்" என்ற வலைக்குள் சிக்க வைக்கவே எப்பொழுதும் விரும்புகின்றது என்பதை உணரவேண்டியதாகின்றது.

## 'தன்னிலை' மறக்கடிக்கப்பட்ட பெண்கள்

தந்தை வழிச் சமுதாயத்தின் சௌகரியங்களுக்காக தங்களின் சுயத்தினை அல்லது தன்னிலையை மறந்து போன பெண்கள் அனேகம் பேர் உண்டு. அத்தகையவர்களின் பிரதிபலிப்புகளாக "யட்சி" கதையில் இடம்பெறும் பல பெண்கள் காணப்படுகின்றார்கள். கதைசொல்லியின் பெரியம்மா, அவளுடைய அம்மா, அத்தை, கதைசொல்லியின் மனைவி போன்றவர்கள் குடும்பத்தலைவராகிய ஆண் சொல்வதைக் கேட்டு நடப்பவர்களாகப் படைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆண்களால் தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்குக் கூட பங்கம் ஏற்படுமானால் அதைத் தட்டிக் கேட்க இயலாமல் கண்ணீர் வடிக்கிறார்கள். அடிப்படைக் கல்வியைப் பெற்றவர்களாக இருந்தாலும் அவர்களுடைய புழங்குவெளி என்பது வீடு சார்ந்தது என்ற நிலையில் சுருங்கிய வட்டமாகக் காணப்படுகின்றது. எனவே அவர்கள் 'தன்னிலை' அல்லது 'சுயம்' மறந்த பெண்களாகக் காணப்படுகின்றார்கள். ஆனால் அக்கதையில் வரும் ஆண்கள் கல்வியறிவு பெற்றிருக்கின்றார்கள். உலக அறிவு பெற்றவர்களாக இருக்கின்றார்கள். பணிநிமித்தமாக பல வெளியிடங்களுக்குச் செல்பவர்களாகத் தெரிகின்றார்கள். பெண்களுக்கான வாழ்வியல் வட்டத்தைத் தீர்மானிப்பவர்களாக இருக்கின்றார்கள். தங்கள் சகோதரிகளுக்குக் கட்டாயக் கல்யாணம் செய்து வைக்கப்படும்போது அதை மறைமுகமாகவேனும் எதிர்க்காதவர்களாக இருக்கின்றார்கள். எனவே படைப்பாளி ஆண்களுக்கும் பெண்களுக்குமான வாழ்வியல் கட்டமைப்புகள் எதிரெதிரானவையாக இருப்பதைப் புலப்படுத்திவிடுகின்றார். அதனுடன் அக்கதையில் வரும் ஆண்பாத்திரங்கள் அனைவரும் 'தன்னிலை' அல்லது 'சுயத்தினை' தங்களுக்கே உரியதாக உரிமை பாராட்டி நடந்து கொண்ட நிலையினை வாசகர்களால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

## 'பெண்ணாக்கல்' படிநிலைகள்

"யட்சி" கதையில் அடிமைத்தனமான வளர்ப்புமுறை, சுருங்கிய புழங்குவெளி, அடிப்படை உரிமைகள் மறுக்கப்படல், அறிவு வளர்ச்சியைத் தடுத்தல் என்று பல வகைகளிலும் 'பெண்ணாக்கல்' செயல்பாடுகள் அரங்கேறிய நிலை காட்டப்படுகின்றன. அக்கதையில் இடம்பெறும் கதைசொல்லியாகிய பாத்திரத்தின் பெரியம்மா தன் காலத்துப் பெண்பிள்ளைகளின் வளர்ப்புமுறை பற்றி எடுத்துரைக்கும்போது "அப்பல்லாம் இப்ப மாதிரி இல்ல. நாங்கள்லாம் பயந்து பயந்து சாவோம். எங்க அப்பா பெருந்திண்ணையில இருந்தா பனைவிசிறிச் சத்தம் கேட்கும். சின்ன வயசுல நான் அப்பாவைப் பாத்ததே இல்லை தெரியுமா? கதவிடுக்கு வழியா பாத்துப் பாத்து அவருக்க முதுகும் புறந்தலையும் மட்டும்தான் எனக்குத் தெரியும்" (Jayamohan, 2011, p.24) என்று கூறுவது உண்டு. அக்கூற்று வழி கடந்த தலைமுறைப் பெண்கள் தந்தை வழிச் சமூகத்தால் எத்தகைய கட்டுதிட்டங்களோடு வளர்க்கப்பட்டார்கள் என்பது புலனாகின்றது.

"யட்சி" கதையைப் பொறுத்தவரை பெண்ணாக்கலுக்கான முதல்படி நிலைக் காட்சியாக மேற்கண்ட பதிவு அமைகின்றது. ஆனால் இத்தகைய பெண்ணாக்கல் பதிவின் மூலம் பதிவு செய்யப்படாத பல நிகழ்வுகளும் நம் மனக்கண்முன் விரிகின்றன. அப்பெண் குழந்தைகள்

விளையாடுவதற்குக் கூட வீட்டின் எல்லையைக் கடந்திருக்க மாட்டார்கள். தன்னைச் சுற்றியுள்ள உலகம் எப்படிப்பட்டது என்று உணர்ந்திருக்க மாட்டார்கள். பொருளாதாரச் சூழலில் தன்னிறைவு பெற்றதான குடும்பச் சூழ்நிலை அங்கு நிலவுவதை கதையை வாசிப்பவர்கள் புரிந்து கொள்வார்கள். எனினும் அக்குடும்பத்தில் பிறந்த பெண்பிள்ளைகள் வெறும் அடிப்படைக் கல்வியை மட்டுமே பெற்றிருப்பார்கள் என்பதை வாசகர்கள் உணர்ந்து கொள்வார்கள். ஆனால் அக்குடும்பத்தில் பிறந்த ஆண்பிள்ளைகள் அனைவரும் உயர்கல்வி கற்றவர்களாகவும் தங்களுக்கான புழங்கு வெளியைத் தாங்களே தீர்மானிப்பவர்களாகவும் இருப்பதை கதை நிகழ்வுகள் புலப்படுத்திச் செல்கின்றன. பெண்குரல் என்பது எச்சூழ்நிலையிலும் எதற்காகவும் அங்கே ஆண்களால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

கேட்டதை வாங்கித் தரவில்லை என்பதற்காக ஒரு பெண்குழந்தை உண்ணாமல் உறங்காமல் அடம்பிடித்த நிலையில் அக்குழந்தையை வெட்டுவதற்குத் தயாரான தந்தையை கதையில் காண்கின்றோம். அக்காட்சிவழி பெண்களின் உணர்வுகளை சிறிதளவும் மதிக்காத தந்தைவழிச் சமூகச்சூழல் நிலவுவதை கதையாசிரியர் உணர்த்த விழைகின்றார் என்று தெரிகின்றது.

கதையில் இடம்பெறும் பெண்பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆன நிலையில் ஊர்த்திருவிழாவில் காட்டப்பட்ட நாட்டியநாடகத்தினைப் பார்ப்பதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை என்று அறிகின்றோம். அவர்களுடைய தந்தை பெண்களை வீட்டிற்குள் அடைத்து பூட்டி வைத்து விடுகின்றார். இத்தகைய நிகழ்வுகளால் பெண்ணுக்கு உலக வாழ்வியல் புரிந்துவிடக்கூடாது என்பதில் தந்தைவழிச் சமூகம் எவ்வளவு கருத்தூன்றியிருக்கின்றது என்பது புரியலாகின்றது. பெண்ணினுடைய புழங்குவெளி என்பது வீட்டைச் சுற்றி மட்டும்தான் என்றறியும்போது அவள் அறிவற்றவளாக வளரவேண்டும் என்பதில் தந்தைவழிச் சமூகம் எத்தகைய தீவிரத்தைக் கையாண்டிருக்கின்றது என்று தெரிகின்றது.

கதைசொல்லியின் அம்மாவும் யட்சியும் உரையாடியதாகக் காட்டப்படும் இடங்களில் “அம்மா எங்கெல்லாம் போயிருக்கிறாள் என்று யட்சி கேட்டாள். அம்மா எங்குமே போனதில்லை. சமையலறை, குளம், வீட்டுத்தோட்டம், மீண்டும் சமையலறை” (Jayamohan, 2011, p.29) என்று பெண்ணிற்கான புழங்கு வெளிகள் கதையில் காட்டப்படுகின்றன.” அம்மா யட்சியிடம் அவள் எங்கெல்லாம் போயிருக்கிறாள் என்று கேட்டாள். யட்சி போகாத இடமே இல்லை. நட்சத்திரங்களுக்கு இடையே மிகமிக இருண்ட ஒரு கடல் அலையடிக்கின்றது. அதில் அவள் நீந்தியிருக்கின்றாள். நிலவில் முகம் பார்த்து பொட்டுப் போட்டிருக்கிறாள். ஏழு கடல்களுக்கு அப்பால் இருக்கும் பொன்னாலான மலைமீது இருக்கும் செம்மணியாலான பாறைமீது படுத்துத் தூங்கியிருக்கிறாள். உருகிய உலோகங்கள் தீ போல ஓடும் பாதாளநதியை பார்த்திருக்கிறாள்.அதிகாலைப் புற்களிலும் பூக்களிலும் படர்ந்திருக்கும் பனித்துளிகளை மட்டும் யட்சி அருந்துவாள். செண்பகப் பூக்களில் ஊறும் முதல் தேனையும்”. (Jayamohan, 2011, p.29) என்று யட்சியின் புழங்கு வெளிகள் காட்டப்பட்டிருப்பது சிந்திக்கத்தக்கது. பெண் என்பவள் ஆணைப்போலவே உலகநடப்புகள் அனைத்தையும் உள்வாங்க வேண்டியவள். தன் அறிவுத்திறத்தால் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பல பங்களிப்புகளைத் தரவேண்டியவள் என்பதற்காகவே யட்சியின் புழங்குவெளிக் கற்பனை கதையில் இடம்பெற்றிருக்கின்றது. இவ்வாறு பாட்டியாகிய செம்பகம் கண்ட பெண்முன்னேற்றக் கனவானது அவள் பேத்தியாகிய கனகுவின் வாழ்வில் கூட சாத்தியப்படுவது என்பது கேள்விக்குரியாகின்றது.

பொதுவாக பெண் என்பவள் தனக்குள்ளே உள்ளார்ந்து ஒடுங்குவளாக இருப்பதைத்தான் தந்தைவழிச் சமூகம் விரும்புகின்றது. அவள் ஆண்களுக்குப் பயன்பட வேண்டிய ஒரு பொருளாகப் பார்க்கப்படுகின்றாள். ”இந்த நிலைமை எல்லாவித சமூக- அரசியல்- கலாச்சார வாழ்விலும் ஆதிக்கம் புரிகின்றது. இவற்றைப் பெண்கள் தங்களுக்கு உரியனவாக உள்வாங்கியுள்ளார்கள். அவர்கள் ‘தவறான நம்பிக்கை’யில் (bad faith) அல்லது நிஜமல்லாத ஒரு நிரந்தரமான நிலைமையில் வாழ்கிறார்கள். தந்தைவழிச் சமூகம் அவர்களுக்கு விதித்த வகிபாகங்களையே ஏற்று வாழ்கிறார்கள். அவற்றை அவர்கள் தேர்வு செய்ததில்லை.” (Raj Gautam, 2018, p.74) என்ற கருத்தினை அணிசெய்வது போல “யட்சி” கதையில் இடம்பெறும் கதைசொல்லியின் பாட்டி, மனைவி, பெரியம்மா, அவளின் அத்தை ஆகியோரை படைப்பாளி வார்த்தெடுத்திருப்பது பளிச்செனத் தெரிகின்றது.

செம்பகத்தின் மகனாகிய கதைசொல்லி தன் மகளாகிய கனகுவைப் பற்றி எடுத்துரைக்கும்போது "ஒரே பெண். பதினேழு வயதில் தன்னந்தனியாக லக்னோவுக்குப் படிக்கப் போகிறேன் என்கிறாள்.எங்கள் பதைப்புகளை அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. சிரிக்கிறாள். பேசினாலும் ஒரே சிரிப்பு. உலகமே வேடிக்கைகளால் நிரம்பியிருப்பது போல. அவள் வாயிலே யட்சிபிரசாதம் வெச்சிருக்கப்படாது. சொன்னபேச்சுக் கேட்க மாட்டா. எதுக்கெடுத்தாலும் கொல்லுன்னு சிரிப்பு. நீயாவது பேசிப்பாத்து ஒரு நல்ல புத்தி சொல்லு (Jayamohan, 2011, p.30) என்று தன் அம்மாவிடம் கூறுகின்ற கூற்றுகளில் மூன்று தலைமுறைகள் கடந்தும் கூட பெண்ணாக்கல் செயல்பாட்டில் வேறுபாடு தோன்றவில்லை என்பது புலனாகின்றது. ஒரு சிறிய வேறுபாடு என்னவெனில் செம்பகத்தின் அப்பா தன் பெண்பிள்ளை தன்பேச்சைக் கேட்கவில்லை என்று அறிந்தவுடன் அவளைக் கொன்றுவிடுவதற்கும் தயாரானார். ஆனால் கனகுவின் அப்பா மகளின் தன்னிலைக்கான (சுயம்) முயற்சி கண்டு தன் தோல்வியை ஒருவிதப் புலம்பலாக வெளிப்படுத்துகின்றார்.

## பெண்களை "பிறர்" நிலைக்குத் தாழ்த்துதல்

செம்பகத்தின் தந்தை, கனகுவின் தந்தை ஆகிய இருவருமே மகள்களாகிய பெண்களை தங்கள் வழிக்குக் கொண்டு வந்து தங்களுடைய 'தன்னிலை'யை நிலை நிறுத்துவதற்கு முற்படுகின்றனர். அதற்காக அவர்கள் மற்ற பெண்களின் துணையை வேண்டி நிற்பதுதான் வேடிக்கை. சமூகத்தில் தன்னுடைய தலைமையின் கீழ் இயங்கும் குடும்பத்தின் பெருமையை நிலை நாட்டிக்காட்ட வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக செம்பகத்தின் தந்தை தன்னைச் சார்ந்திருக்கும் பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதேயில்லை. அதனால் தன்னிலையாகிய சுயத்தில் விருப்பம் கொண்டவளான செம்பகத்தினை தன் வழிக்குக் கொண்டுவருவதான் பெண்ணாக்கல் முயற்சியில் அவளுடைய அம்மாவே துணைபோக வேண்டிய நிலையை உருவாக்குகின்றார். செம்பகத்தினுடைய அறிவுவேட்கை அவளை தந்தைவழி சமூகக் கட்டமைப்பிலிருந்து விடுவித்து விடுமோ என்ற அச்சத்தால் அவளுக்குத் திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகளைத் துவக்கி விடுகின்றார். அதற்குச் செம்பகம் உடன்படாத நிலையில் அழுது புலம்புதல், தற்கொலை முயற்சியில் ஈடுபடுதல் போன்ற செயல்களால் செம்பகத்தின் அம்மா தன் கணவனுக்கு அல்லது தான் சார்ந்த ஆண்வழிச் சமூகத்திற்குத் துணை நின்றாள். திருமணம் செய்து கொள்ள செம்பகத்தைச் சம்மதிக்க வைத்தாள்; அவளைப் பெண்ணாக்கினாள்; அதன்பயனாக தந்தையின் எண்ணம் ஈடேறுகின்றது. அந்த வஞ்சகத்தை செம்பகத்தால் மறக்கமுடியவில்லை. அதனால் புகுந்த வீட்டிற்குச் சென்ற பிறகு தன் பெற்றோர்களின் இறப்பு நிகழும் வரை தன் பிறந்த வீட்டிற்கு அவள் செல்லவே இல்லை. அவளுடைய அந்த உணர்வு அவள் மனதிற்குள் சுயம் சுழன்றுகொண்டிருப்பதை வெளிக்காட்டுகின்றது.

கனகுவின் தந்தையாகிய கதைசொல்லி தன்மகளை தன்னால் மாற்ற இயலவில்லை என்று அறிந்தவுடன் தன் மனைவி மூலம் அதைச் செயலாக்க முனைந்திருக்கின்றார் என்பதை உய்த்துணர முடிகின்றது. "எங்கள் பதைப்புகளை அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை" (Jayamohan, 2011, p.30) என்கின்ற போது அவர் தன் மனைவியையும் உட்படுத்திய நிலையில் பேசுகின்றார் என்பது புலனாகின்றது. மனைவியின் பேச்சு மகளிடம் எடுபடவில்லை என்றறிந்த நிலையில் தன் தாயின் உதவியை நாடுகின்றார். ஆகவே அறிந்தோ அறியாமலோ குடும்ப கௌரவத்தின் பொருட்டு தன் அதிகாரத்தை நிலைநாட்டி 'பெண்ணை நிரந்தரமான பிறர் (The other)' என்ற நிலைக்குத் தாழ்த்துவதற்காக ஆண்கள் பெண்களையே பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதைப் படைப்பாளி உணர வைக்கின்றார். அதற்கு பெண்கள் தங்கள் சுயம் பற்றிய அறியாமையின் காரணமாகத் துணைபோகின்றார்கள் என்பதும் நிதர்சனமான உண்மையாகின்றது.

பெண் நுகர்வுக்குரிய பொருளாகப் பார்க்கப்படுவதால் அவளுடைய அழகு பிரதானப்படுத்தப்படுகின்றது. 'யட்சி' என்ற தெய்வப்பெண்ணின் அழகு பற்றிய எடுத்துரைப்பில் மானிடப்பெண்களின் அழகு பற்றிய சில கருத்தாடல்களும் மறைந்து கிடக்கின்றன. யட்சி என்ற தேவதை தன் அழகில் மயங்கும் ஆடவர்களை வசியப் படுத்திக் கொன்று தின்று விடுவாள் என்பது குமரி மாவட்ட மக்களின் நம்பிக்கை. அழகான பெண்களின் மனஉறுதியை, ஆபத்து நேரங்களில்

தம்மைத்தாமே காத்துக் கொள்ளும் அவர்களின் திட உணர்வை மதிக்க வேண்டும் என்ற நல்லுணர்வு ஆண்வழிச் சமூகத்திற்கு வருவதில்லை. எனவே அவர்களை 'வசியப்படுத்திக் கொல்லும் யட்சி தேவதை'யாக மாற்றி விடுகின்றார்கள். அதாவது மீமானுட நிலைக்கு உயர்த்துவது போன்றதொரு போலித் தோற்றத்தை உருவாக்கி 'பிறர்' என்னும் நிலைக்கு தாழ்த்தி விடுகின்றார்கள் என்பதுதான் உண்மை. ஆனால் இயல்பு வாழ்க்கையில் பெண்களின் அழகு சில நேரங்களில் அவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தி விடுகின்றது. பெண்கள் அழகாக இருப்பது என்பது அவர்களின் குற்றமல்ல. அதேவேளையில் அவர்கள் பலநிலைகளிலும் தங்களைக் காத்துக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர்களாக மாறவேண்டும் என்பது யட்சி என்னும் காட்சிப்படிமம் வாயிலாக படைப்பாளியால் உணர்த்தப்படுகின்றது.

யட்சிக்கு வாயில் இரு வீரப் பற்கள் இருப்பதாக கதைசொல்லியின் அம்மா கூறுகின்ற பகுதி கதையில் இடம்பெறுகின்றது. வாயில் இரு வீரப் பற்கள் இருந்தன. அழகான பொண்ணுக்கு ரெண்டு வீரப்பல் இருந்தா இன்னும் அழகுதான் (ஜெயமோகன்,பேய்க்கதைகளும் தேவதைக் கதைகளும்,பக்.24) முதலிய உரையாடல்கள் வழி பெண் அழகாகக் காட்சியளிப்பதில் தவறில்லை. ஆனால் அவள் வீரம் மிகுந்தவளாகவும் திகழவேண்டும் என்பதைத்தான் செம்பகம் மறைமுகமாக எடுத்துரைக்கின்றாள். அத்தகு வீரமனம் கொண்ட தன் பெண்ணை எதிர்கொள்வதற்குத் தயங்கிய தந்தை தன் மனைவியாகிய தாயின் மூலம் காரியம் சாதித்துக் கொள்கிறார் என்று காணும்போது 'பெண்ணாக்கல்' என்பது பல வடிவங்களில் உருவெடுப்பதாக உணர்ந்து கொள்கின்றோம்.

யட்சி பற்றிய கற்பனையானது கதையில் இடம்பெறும் சுதந்திர வேட்கை கொண்ட பெண்ணாகிய செம்பகத்தின் மனவெளிதான் என்று ஊகித்தறியலாம். அவள் இயல்பாகவே "சுயம்" அல்லது "தன்னிலை" என்ற கருத்து வகையில் ஆர்வம் கொண்டவள். ஆனால் அவளுடைய வளர்ப்புச் சூழல் 'தன்னிலை' என்பதை அடைய விடாமல் தடுத்துவிடுகின்றது. பிற பெண்களைப் போன்று இல்லாமல் செம்பகம் இயல்பாகவே மனதில் அச்சஉணர்வுக்கு இடம்கொடாத பெண்ணாகக் காட்சியளிக்கின்றாள்.

செம்பகம் சிறுமியாக இருந்தபோது அவள் ஆசைப்பட்ட பொருளை அப்பா வாங்கித்தர மறுத்து விட்டார். அதனால் அவள் பட்டினிகிடந்தது மட்டுமல்லாமல் விடியும் வரை 'தேங்காப்புரையில்' அசையாமல் தலைமுடியை விரித்துப்போட்ட கோலத்தில் அமர்ந்திருந்தாள் என்றறியும்போது மற்ற பெண்களிடமிருந்து அவள் தனித்துத் தெரிகின்றாள். அத்துடன் விடியும் வரை அவள் அவ்வாறு அமர்ந்திருந்தாள் என்றறிந்த முன்கோபக்காரரான தந்தை அரிவாளைத் தூக்கி வந்து ஓங்கி வெட்டுகின்றார். விறற்கடை வித்தியாசத்தில் தூணில் வெட்டு விழுந்த போதும் செம்பகம் இம்மியும் அசையாமல் தன் சிவந்த கண்களால் தந்தையை உற்று நோக்குகின்றாள். அதனால் தந்தை தன் மகள் மீது தெய்வமாகிய பகவதி ஏறியிருப்பதாக எண்ணித் தடுமாறிப்போகின்றார். அன்றிலிருந்து அவள் அவளுடைய முன்னோர்கள் பிரதிஷ்டை செய்து வைத்திருந்த செம்பகமரத்து யட்சிக்குத் தங்கையாகப் பார்க்கப்படுகின்றாள். ஒரு சாதாரணப் பெண்ணாகிய செம்பகத்தின் ஆற்றலை தந்தை வழிச் சமூகத்தால் ஜீரணிக்க இயலவில்லையாதலால் அவள் மீமானுடப் பெண்ணோடு ஒப்ப வைத்துப் பார்க்கப்படுகின்றாள். ஆனால் செம்பகத்தின் பண்புகளைக் கொண்ட ஓர் ஆண்மகனை கதை காட்டுவதாக இருந்திருப்பின் கதையின் போக்கு மிகமிக வேறுபட்டதாக அமைந்திருக்கும். படைப்பாளியால் அவனை மீமானுட நிலைக்குக் கொண்டு சென்றிருக்க முடியாது.

இரவுநேரங்களில் நாடகம் பார்க்கச் செல்லுதல், மரவள்ளிக்கிழங்குத் தோட்டத்தில் இ.எம்.எஸ்ஸின் பேச்சினைக் கேட்கச் செல்லுதல் என்று செம்பகம் தனித்து இயங்குவதற்கு வீட்டிலுள்ளவர்களின் நம்பிக்கையான "இவள் யட்சியின் தங்கை" என்ற புரிதலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறாள். நள்ளிரவில் எவருக்கும் தெரியாமல் அவள் மரவள்ளிக் கிழங்குத் தோட்டத்திற்குச் சென்ற தகவலை விடிந்தவுடன் அனைவரும் அறிந்து விடுகின்றார்கள். அப்பொழுது 'எவ்வாறு இரவுநேரத்தில் தனியாகச் சென்றாய்?' என்று கேட்டவர்களுக்கு யட்சி வழிகாட்டி அழைத்துச் சென்றதாகக் கூறிவிடுகின்றாள். அதை அவர்களும் நம்புகின்றனர். அவளுக்குள் மிகச் சிறப்பாக இட்டுக்கட்டிக் கதை சொல்லும் ஆற்றல் ஒளிந்திருந்தது". அம்மா சொல்வது அத்தனை தத்ரூபமாக இருக்கும்" (Jayamohan, 2011, p.28) என்று கதைசொல்லி செம்பகத்தின் கதையாற்றலைச் சுட்டிக் காட்டுவதுண்டு. தன் சொந்த முயற்சியால் அண்ணன் வாங்கி வைத்திருந்த புத்தகங்களை

வாசித்து கம்யூனிச அறிவை வளர்த்துக் கொள்கின்றாள். இங்ஙனம் கம்யூனிசச் சிந்தனைகளால் கவரப்பட்ட செம்பகத்தினை வீட்டுச் சூழல் வெறுமனே நடமாடும் ஒரு பொம்மைபோல மாற்றி விடுகின்றது.

செம்பகத்திற்கு தந்தையின் அர்த்தமற்ற மிரட்டல்களும் கெடுபிடிகளும் அதிகாரமும் சிறிதளவும் பிடிக்கவில்லை. அதனால்தான் அவள் மனவெளியில் உருவான யட்சியாகிய தேவதை காட்டிக் கொடுத்த நாடகக் காட்சியில் தாட்சாயினி சிவனை எரிப்பதான காட்சியைக் கண்டு இரவுமுழுக்கச் சிரித்ததாகச் சொல்கின்றாள். ஆணாதிக்கத்தின் 'அலப்பரைகளை' அவளால் ஏற்றுக் கொள்ளமுடிவதில்லை. ஆனால் சுயத்தை விரும்பிய பெண்ணாகிய செம்பகத்தை தந்தைவழிச் சமூகம் பெண்ணாக்கல் பாரபட்சம் என்ற வலைக்குள் சிக்க வைத்துவிடுகின்றது. உயிரியல் பெண்ணாகிய செம்பகத்தை சமூகப் பெண்ணாக மாற்றுவதற்காகப் பல அடுக்குக் கட்டமைப்பு வேலைகள் அங்கே அரங்கேறுகின்றன. கம்யூனிசச் சிந்தனை வாயிலாக அவள் பெற விரும்பிய உலகியலறிவை தந்தை வழி அதிகாரமானது மழுங்கடிக்க முனைந்ததன் விளைவு கட்டாயக் கல்யாணமாக உருவெடுக்கின்றது.

செம்பகம் தாயின் தற்கொலை முயற்சியாகிய மிரட்டலுக்கு அடிபணிந்து தந்தை ஏற்பாடு செய்த கட்டாயக் கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்ள வேண்டியவளாகின்றாள். எனினும் அவளுக்குள் 'சுயம்' என்பது சுழன்று கொண்டேதான் இருந்தது. இதை படைப்பாளி ஓர் உள்ளுறைக் காட்சி மூலம் மறைமுகமாகச் சுட்டிச் செல்வதுண்டு. "தோட்டத்து நெல்லிமரத்தின் நிலாநிழல் வாசல் வழியாக உள்ளே பரப்பிய வலையில் நானும் அவளும் தனித்திருந்தோம். காற்றில் வலை அலைவுற்றது. வெகு தொலைவில் திற்பரப்பு அருவி சீறிக் கொண்டிருந்தது" (Jayamohan, 2011, p.23) என்ற கதைசொல்லியின் காட்சிப்படுத்தல் வழி அவளுடைய சுயத்தை தந்தை வழிச் சமுதாயத்தால் உருவாக்கப்பட்ட 'குடும்ப கௌரவம்' என்ற வலை சிக்கவைத்து விட்டது என்று அறிகின்றோம். ஆனால் சுயத்தை விட்டுக் கொடுக்க நேர்ந்ததால் ஏற்பட்ட சீற்றம் இன்னும் அவள் மனதிற்குள் உருண்டு கொண்டுதான் இருக்கின்றது; அருவி எழுப்பும் சீற்றம் போல சீறிக்கொண்டுதான் இருக்கின்றது என்பதை மேற்கண்ட காட்சிப்படுத்தல் வழி உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஆனால் வாழ்வியற் சுழற்சியில் தொடர்ந்து வரும் பெண்ணாக்கலாகிய தாக்குதல்களால் ஏற்பட்ட தடுமாற்றங்கள், சலிப்புகள் இறுதியில் அவளை ஒரு சராசரிப் பெண்ணாக மாற்றி விட்டதோ என்று எண்ணவைக்கின்றது. எனினும் அவ்வாறு எண்ணுவதற்கு இடங்கொடாத வகையில் படைப்பாளி சில குறிப்புகளை கதையின் இறுதியில் விட்டுச் செல்கின்றார்.

செம்பகத்தின் மகனாகிய கதைசொல்லி தன் மகளின் பண்புநலன்கள் பற்றிக் குறை கூறியவாறு "நீயாவது பேசிப்பாத்து ஒரு நல்ல புத்தி சொல்லு" (Jayamohan, 2011, p.30) என்று கேட்டுக் கொண்டபோது அதைக்காதில் வாங்காதவளைப்போலத் தெரிந்த செம்பகம் "ரொம்ப வெயிலா இருக்கேடா" (Jayamohan, 2011, p.30) என்கின்றாள். ஆணாகிய மகன் பெண்ணாகிய பேத்தியைப் பற்றிக் குறை கூறியபோது அவளால் அதை மனதளவில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வெயில் இம்சைப்படுத்துவது போல நீயும் ஆணாதிக்கத்தின் பிரதிநிதியாக இருந்து பெண்சமூகத்தை இம்சிக்கிறாய் என்று மறைமுகமாக உணர்த்திவிடுகின்றாள்.

செம்பகத்தின் பேத்தியாகிய கனகு மிக நன்றாக இருசக்கரவாகனம் ஓட்டுகின்றாள். அதை செம்பகத்தின் மகனால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. ஆண்களை விட பெண்கள் குறைவான ஆற்றலுடையவர்கள்; குறைவான அறிவுடையவர்கள் என்பதான எண்ணவோட்டங்களே ஆண்களிடம் மிகுதியாகக் காணப்படுவதால்தான் பெண்களின் முன்னேற்றத்தை ஆண்கள் ஒருவித ஐயப்பாட்டுடன் காண்கின்றார்கள். அதனால்தான் கனகு வண்டி ஓட்டி வந்தபோது அவளுடைய தந்தை "எறங்குடி கீழ எருமமாடு மாதிரி இருக்கு வண்டி" (ஜெயமோகன்,பேய்க்கதைகளும் தேவதைக் கதைகளும் பக்.30) என்று கூறுகின்றார் என்று புரிகின்றது. ஆனால் செம்பகத்திற்கு பேத்தியின் ஆற்றலைப் பற்றியோ அறிவைப் பற்றியோ எவ்வித ஐயப்பாடும் இல்லை. பேத்தி வண்டி ஓட்டிச் செல்ல எவ்விதத் தயக்கமும் இன்றி அவள் பின்னால் வண்டியில் அமர்ந்து செல்கின்றாள்.

செம்பகம் போன்ற கடந்த தலைமுறைப் பெண்கள் தந்தைவழிச் சமுதாயத்தினரால் "பிறர்" என்ற நிலைக்குத் தாழ்த்தப்பட்ட போது அதை மனமில்லாமல் ஏற்றுக் கொண்டார்கள். அந்நிலையில்

தன் சுயத்திற்கு ஏற்பட்ட இழுக்கை எண்ணி உள்ளுக்குள் புழுங்கிய நிலையில் காணப்பட்டார்கள். கடந்த தலைமுறைப் பெண்களின் பேத்திகளாகிய இன்றைய பெண்கள் தங்களுக்கு நேரும் இடர்பாடுகளை மெல்ல மெல்ல முறியடிக்கும் வல்லமையைப் பெற்றவர்களாக மாறிக்கொண்டிருக்கின்றார்கள். கனகு போன்ற பெண்களால் அத்தகு சூழல் உருவாகிக் கொண்டிருக்கின்றது என்று எண்ணத்தோன்றுகின்றது. அதை மெய்ப்பிக்கும் வகையில் படைப்பாளி ஒரு கருத்தை கதையின் இறுதியில் விட்டுச் செல்கிறார். “பைக் புகை கக்கி முன்னால் பாய்ந்து போயிற்று. கனகுவின் குட்டைத் தலைமயிர் தீபோல கொழுந்து பரப்பிப் பறந்தது.” (Jayamohan, 2011, p.31) என்றவாறான படைப்பாளியின் வருணனை சிந்தனைக்குரியது. அதாவது பெண்களின் பின்னிய கூந்தலானது அவர்களுடைய வாழ்க்கை ‘பெண்ணாக்கல்’ என்ற வகைப்பாட்டிற்குள் பின்னிக் கிடப்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது என்று புரிந்து கொண்டால் ’தீ போல காற்றில் பறக்கும் குட்டைக் கூந்தலோ அவர்களது வாழ்க்கையில் சுதந்திரம் மலர்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது என்று எடுத்துக்கொள்ளலாம்.

## முடிவுரை

மேற்கண்டவாறு ஜெயமோகனின் “யட்சி” சிறுகதையில் பெண் என்ற மனித உயிரியை தந்தைவழிச் சமூகமானது தன் வசதிக்கேற்ற சமூக உயிரியாக மாற்றும் பொருட்டு பலவகையான வரையறைகளைக் கையாண்டிருப்பதைக் காண இயலுகின்றது. அதாவது பெண்களைக் கட்டுப்பெட்டியாக வளர்த்தல், அவர்களின் புழங்கு வெளியைக் குறைத்தல், பெண்களை அடக்கியாளுதல், அவர்களது அறிவு விருத்திக்கு முட்டுக்கட்டையிடுதல், பெண்களின் ஆற்றல்களை ஏற்றுக் கொள்ள மனமின்றி அவர்களை மீமானுடப் பெண்களாகக் காட்சிப்படுத்துதல் என்று பலவகையான பெண்ணாக்கல் வரையறைகள் கதைக்குள் பொதிந்துள்ளன என்பதை இவ்வாய்வு உறுதிப்படுத்துகின்றது.

## References

Jayamohan, (2011), Ghost Stories and Fairy Tales, Kizakku Publishing, Chennai, India.

Raj Gautam, (2018), History and Principles of Feminism, New Century Book House, Chennai, India.

Vijayalakshmi, T., (2019), Feminist Research Approach, Piraz, 1 (1) 51-56.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License

சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16[th] - 17[th] March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*

**RAJA PUBLICATIONS**
**10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.**
**Mobile : +91-9600535241**
**website : rajapublications.com**

**19** பகுதி-1
**Part -1**

# இலக்கண உரைகளில் வாழ்வியல் விழுமியங்கள்

முனைவர் ர. ரதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வுமையம்,
அரசுக்கல்லூரி சித்தூர், பாலக்காடு, கேரளம், இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் அறிவு மரபில் உரைகளுக்கு என தனித்த இடமுண்டு. இவை தம் கால வழக்கியல்களையும், எதிர்கால சிந்தனை மரபையும் முன்னிறுத்தி புத்தாக்கத் தன்மையோடு விளங்கி வருகின்றன. அந்தவகையில் மக்களின் வாழ்வியலோடு இன்றியமையாதத் தன்மையில் இரண்டறக் கலந்து விளங்கும் ஒழுக்கம், நாகரீகம், அறம் போன்றவை உரையாசிரியர்களின் உரை வழி எடுத்துக் காட்டப்படுகின்றது.

**முன்னுரை**

தொல்காப்பியத்தைப் போன்றே தொல்காப்பிய உரைகளும் விளங்க முடியா அரும்பொருள் நிறைந்து காணப்படுபவையாகும். இவை தமக்கு முன்னர் உள்ள இலக்கண மரபுகளையும், தம் கால வழக்குகளையும், எதிர்கால சிந்தனை மரபுகளையும் கருத்தில் கொண்டு புத்தாக்கத் தன்மையில் ஒவ்வொரு சூழலிலும் தம்மைப் புதுப்பித்துக் கொண்டே வந்துள்ளன. அதற்கு சான்றுதான் இன்று நம்மிடையே காணக்கிடைக்கும் பல வகைப்பட்ட தொல்காப்பிய உரைகள். இவை தொல்காப்பியர் கூறிய விதிகளினின்று மாறுபட்ட சில மரபுகளை தமது உரைகளினூடாக வெளிப்படுத்துகின்றன. இவற்றை விதிமீறல்கள் எனக் கொள்ளாது, கால மாற்றத்தின் வெளிப்பாடுகள் என்ற தன்மையிலேயே பார்க்கப்பட்டு வருகின்றன. அவ்வடிப்படையில் தொல்காப்பியச் சொல்லதிகார உரைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்களை வெளிக்கொணரும் தன்மையில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**உரைகளில் வாழ்வியல்**

> "இலக்கியத்தைப் போன்று, இலக்கணம் வாழ்வியல் கூறுகளை நேரடியாகவும், தெளிவாகவும் கூறுதல் இயலாது. எனினும் இலக்கணத்தின் உரைகள் மூலம் பண்டைக்கால மக்களின் பண்பாட்டுச் சிறப்புகளையும், நாகரீக வளர்ச்சியினையும் அறிய முடியும்"[1]

எனும் தன்மையைக் கருத்தில் கொண்டு உரையாசிரியர்கள் உரை விளக்கங்களை அவ்வக் காலகட்டத்திற்கேற்றாற் போன்றும், மொழிப பயன்பாட்டைக் கருத்தில் கொண்டும் உரை விளக்கங்களை எழுதி வருகின்றனர். இதன் மூலமாக அக்காலச் சூழல், மொழி, பழக்கவழக்கங்கள் முதலான வாழ்வியல் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள இவை ஏதுவாக அமைகின்றன. இது ஒவ்வொரு உரையாசிரியரைப் பொறுத்தும், அவர் வாழ்ந்த காலம், சூழல் ஆகியவற்றைப் பொறுத்தும் வேறுபடும் அத்தகைய மாற்றங்கள் பிரதியை ஒவ்வொரு மாறுபட்ட தளத்தில் வைத்துப் புரிந்து கொள்வதற்கு இவ்வுரைகள் இன்றியமையாதவையாக இருந்து வருகின்றன. அந்த வகையில் தொல்காப்பியத்தின் எழுத்து, பொருள் அதிகாரங்களை விட, மிகுதியான உரைகளைப் பெற்ற சொல்லதிகாரம் வழி, உரையாசிரியர்கள் வெளிக்காட்டியிருக்கின்ற அவ்வக்கால வாழ்வியலையும், அதன் மூலமாக வெளிப்படுகின்ற வாழ்வியல் விழுமியங்களையும் இனங்காண இயலும்.

**ஒழுக்கம்**

> "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
> அ∴றிணை என்மனார் அவரல பிறவே"[2]

சிறப்பிதழ்
**Special Issue**

**3-4 பங்குனி 2052**
**16th - 17th March 2021**

**ISSN : 2321 - 984X**


| | | | |
|---|---|---|---|
| 1. | சி.தீபா & ரா.ரவிச்சந்திரன் | 'பூனாத்தி' சிறுகதை தொகுப்பில் எதார்த்த நிலை கதை மாந்தர்கள் | 1-5 |
| 2. | S. CHELLAPPA | மனிதனை ஆளும் ஐம்புலன்கள் | 6-10 |
| 3. | ம.கவிதா | சூர்யகாந்தன் நாவல்களில் குடும்பச் சிக்கல்கள் | 11-16 |
| 4. | க. இராஜேஷ் | ஆலயங்களில் தாள இசைச் சிற்பங்கள் | 17-20 |
| 5. | S. உமா | அறம்- ஓர் ஆய்வு | 21-25 |
| 6. | பெ.சுமதி | பரிபாடலில் மதுரை மக்களின் வாழ்வியல் | 26-34 |
| 7. | இ.கலைக்கோவன் | முருகவேள் படைப்புகளின் வழி மார்க்சிய பார்வையில் மனிதகுல வாழ்வியலும் சூழலியலும் | 35-40 |
| 8. | இரா. ஜெய்சங்கர் | ஆசாரக்கோவையில் சுகாதாரச் சிந்தனைகள் | 41-46 |
| 9. | ர.ரதி | இலக்கண உரைகளில் வாழ்வியல் விழுமியங்கள் | 47-51 |
| 10. | ப.குருசந்தர் | திரைத்துறையில் இலக்கியவாதிகள் | 52-56 |
| 11. | தா.க. அனுராதா | பாரதியார் கவிதைகளில் தேசிய ஒருமைப்பாடு | 57-60 |
| 12. | கு. பத்ம பிரியா | சங்க இலக்கியங்களில் வாழ்வியல் | 61-66 |
| 13. | ரா. ராஜேஸ்வரி | புதுக்கவிதையில் வாழ்வியல் | 67-70 |
| 14. | கா. சந்திரசேகரன் | பட்டினப்பாலை வெளிப்படுத்தும் மக்கள் விளையாட்டு | 71-74 |
| 15. | அ. லதா | சிறுதெய்வ வழிபாட்டில் கெசக்கோம்பைக் கன்னி | 75-79 |
| 16. | SUNITHA MADHAVAN | THE EPIGRAPHIST OF EPIC PROPORTIONS | 80-88 |
| 17. | ஆ.ஏழுமலை | வெ. இறையன்புவின் நற்சிந்தனை | 89-93 |
| 18. | ஏஞ்சலின் பெராக்கா கிறிஸ்டோபல் & அலிஸ் ராணி | இரட்சணிய யாத்திரிகத்தில் வாழ்வியல் | 94-98 |
| 19. | இரா. ரம்யாமகேஸ்வரி & ந.பாமிதா | நற்றிணை கூறும் களவு வாழ்க்கை முறை | 99-103 |
| 20. | அ. ஐவி & ஜெ. சுஜாதா | விவேகசிந்தாமணி காட்டும் வாழ்வியல் கூறுகள் | 104-110 |
| 21. | வி.ஜெயபிரியா & க. தமிழ்ச்செல்வன் | உரையாடல் கலையில் படர்க்கை மாந்தரின் கூற்று | 111-118 |
| 22. | சு. ஜெயந்தி & G.R. வள்ளியம்மாள் | வேதாத்திரி மகரிஷியின் மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்தான "அறிவே தெய்வம்" என்ற தத்துவத்தை பற்றிய ஓர் ஆய்வு | 119-124 |
| 23. | ஜா.காதர்மைதின் | குறுந்தொகையில் முல்லை நில மக்களின் வாழ்வியல் நெறிமுறைகள் | 125-130 |
| 24. | அ.கோதேஸ்வரி & தா.ஷமிலா ஜோஸ்டர் | ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகளில் கணவன் மனைவி உறவுமுறைச் சிக்கல் | 131-135 |
| 25. | சி.லோகநாயகி & க. தமிழ்ச்செல்வன் | குறுந்தொகையில் எண்வகை மெய்ப்பாடுகள் | 136-143 |
| 26. | ப. மாக்கில்மா | அகநானூற்றில் பரணர் பாடல்களின் வழி மன்னர்களின் போர்த்திறம் | 144-147 |
| 27. | தே.மரிய மெர்லின் கவிதா & மி. கவிதா | கலித்தொகை காட்டும் ஆயர் வரைவுமுறை | 148-150 |
| 28. | மு. மெய்வேல் & பி. குருசந்தர் | எட்டுத்தொகை - அகஇலக்கியங்களில் முல்லைத் திணை தலைவி | 151-154 |
| 29. | மு. முனீஸ்மூர்த்தி | தமிழ் மரபில் 'சேரி' | 155-162 |
| 30. | த. முத்துலெட்சுமி & சு.மல்லிகா | ஐங்குறுநூற்றில் வேளாண்மை சிந்தனைகள் | 163-167 |
| 31. | ச. பாண்டுரங்கன் | நா.முத்துக்குமார் படைப்புகளில் சமுதாயம் | 168-173 |
| 32. | ர.பரமேஸ்வரி | கிராமத்து நதி கவிதைகளின் வழி தமிழர் வாழ்வியல் | 174-179 |
| 33. | அ. இராஜலட்சுமி | நடுகல் வழிபாடு | 180-185 |
| 34. | கா.ரஜினி | யோகக் கலையும் சித்தர்களும் | 186-189 |
| 35. | பி.ராணி | தொல்காப்பிய அறுவகை இலக்கணங்களில் அளவு நிறைப் பெயர்கள் | 190-194 |
| 36. | கோ. இரவிச்சந்திரன் | புதுக்கவிதையில் பெண்ணியம் | 195-201 |
| 37. | ஆ. சசிகலா | உமையம்மை பற்றிய பிள்ளைத்தமிழில் வரும் பக்தியுணர்வு | 202-207 |
| 38. | ரா.சத்யா | காரிக்கைக்கு பின் உறுப்பிலக்கண வளர்ச்சி நிலைகள் | 208-213 |
| 39. | இரா.சாவித்திரி | பாலகுமாரன் புதினங்களில் பெண்ணியச் சிந்தனை | 214-218 |
| 40. | ம.சிவகாமி | திருமந்திரமும் இன்றைய வாழ்வியலும் | 219-223 |
| 41. | ஜ.ச.சுபாஷிணி & வெ. இராமதாஸ் | வேதாத்திரி மகரிஷியின் படைப்புகளில் குழந்தைகளுக்கான அறநெறிகள் | 224-229 |
| 42. | S. சுகன்யாதேவி | சிவவாக்கியரின் சமத்துவச் சிந்தனைகள் | 230-233 |
| 43. | ந.சுமதி | சு. தமிழ்செல்வியின் நாவலில் 'பொன்னாச்சரம்' | 234-238 |
| 44. | ப.கு.சுதா | சித்தர்கள் காட்டும் வாழ்வியல் அறங்கள் | 239-242 |
| 45. | ஆ. தியாகராஜன் | தமிழ் இலக்கியங்கள் சுட்டும் மருத்துவம் | 243-247 |
| 46. | அ.வடிவுக்கரசி | தமிழ்ப் சிற்றிதழ்களில் காணும் கட்டுரையின்வழி வாழ்வியல் | 248-253 |
| 47. | செ.வீரலட்சுமி | குறுந்தொகை நெய்தல் திணை தலைவியின் வாழ்வியல் | 254-257 |
| 48. | ஹ.சுபி & ரா.விஜி | அறிவியல் இதழ்களில் தமிழ்மொழிநடையும் கலைச்சொல்லாக்கமும் | 258-261 |
| 49. | சு.விமலா | தமிழ்ப் பருவ இதழ்களில் சிறுகதைகளின்வழி வாழ்வியல் | 262-266 |
| 50. | சை.மைதீன்பீ | சிறுகதைகள் உணர்த்தும் மொழிநடை | 267-272 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

16 பங்குனி 2052
29th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021
சிறப்பிதழ் : தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி
(பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தன்னாட்சிக் கல்லூரி)
சிவில் விமான நிலைய அஞ்சல், கோயம்புத்தூர் - 641 014

# இந்திய இலக்கியங்களும் நவீனக் கோட்பாடுகளும்

சிறப்பிதழ் ஆசிரியர்கள்
**Special Issues**

முனைவர் கோ. வசந்திமாலா, இணைப்பேராசிரியர்
முனைவர் இரா. சுமதி, உதவிப்பேராசிரியர்
முனைவர் வே. விக்னேசு, உதவிப்பேராசிரியர்
முனைவர் து. ராஜம்மாள், உதவிப்பேராசிரியர்
முனைவர் அ. வீரமணி, உதவிப்பேராசிரியர்

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

23 பகுதி-3
Part -3

16 பங்குனி 2052
29th March 2021

ISSN : 2321 - 984X


| | | | |
|---|---|---|---|
| 84. | ஜ. கிறிஸ்டல் ஜெயா | தோப்பில் முகம்மது மீரான் சிறுகதைகளில் இஸ்லாமியச் சமுதாய நிலையும் மாற்றமும் | 573-577 |
| 85. | கி. கிறிஸ்டல் சுஜி | குறுந்தொகையில் பெண்ணியம் | 578-582 |
| 86. | இரா.மலர்விழி | பாரதியார் பாடல்களில் பெண்ணியச்சிந்தனைகள் | 586-588 |
| 87. | ஆ. மணிகண்டன் | ஐயப்பன் வழிபாட்டில் உளவியலும் பக்தியும் | 589-593 |
| 88. | ப.மணிமேகலை | மணிமேகலை காப்பியமும் பெண்ணிய ஒடுக்குமுறைகளும் | 594-598 |
| 89. | அ. மீராமைதீன் | ஹைக்கூக் கவிதைகளில் சமூகம் | 599-604 |
| 90. | இரா.மூர்த்தி | முருகியல் கோட்பாட்டு நோக்கில் முருகப் பெருமானின் தசாங்கம் | 605-611 |
| 91. | க.முனியாண்டி | அ.முத்துலிங்கம் சிறுகதைகளில் நவீனச் சிந்தனைகள் | 612-619 |
| 92. | க.நாகரத்தினம் | திருவாசகத்தில் உளவியல் கூறுகள் | 620-627 |
| 93. | க.பவித்ரா | ஒப்பீட்டியல் நோக்கில் முருகனின் திருவுருவச் சிறப்புக்கள் | 628-634 |
| 94. | க.பிரகாஷ் | குறுந்தொகையின் பாலைத் திணையில் சூழலியல் | 635-640 |
| 95. | வெ. பிரவீணா | சுப்ரபாரதிமணியன் சிறுகதைகளில் உளவியல் பாங்கு | 641-645 |
| 96. | சி.ஜேப்ரசில்லா சகாயமேரி | பெண்ணிய நோக்கில் "அஞ்சலை" புதினம் | 646-657 |
| 97. | பா. ராஜன் | மானிடவியல் நோக்கில் போர் | 658-664 |
| 98. | ஆ.இராஜாராம் | புறநானூற்று அறப்பாடல்களில் அழகியல் வெளிப்பாடு | 665-669 |
| 99. | சு.ரேகா | சிலப்பதிகாரத்தில் எண்வகை மெய்ப்பாடுகள் | 670-677 |
| 100. | பொ.சக்திமயில் | வேல ராமமூர்த்தியின் குற்றப்பரம்பரை நாவலில் வாழ்வியல் கோட்பாடு | 678-682 |
| 101. | கு. சங்கீதா | இதழ்களில் வெளிப்படும் பெண்களுக்கான அறிவியல் கோட்பாடுகள் | 683-690 |
| 102. | கோ. சாந்தமூர்த்தி | தலித் புதினங்களும் மொழிநடைக் கோட்பாடுகளும் | 691-696 |
| 103. | ஆ.சசிகலா | குமரமலை முருகன் பிள்ளைத்தமிழில் வரும் தொன்மம் | 697-704 |
| 104. | ம செல்வ ரோசி புஷ்பா | மானுடவியல் நோக்கில் புறநானூறு | 705-710 |
| 105. | கா. செல்வக்குமார் | சங்க இலக்கியங்களில் மேலாண்மைக் கோட்பாடுகள் - ஒரு பார்வை | 711-714 |
| 106. | அ.சேமலா வசந்தா | "நெடுஞ்சாலை" புதினத்தில் உளவியல் கூறுகள் | 715-726 |
| 107. | நா. சியாமளா | மகுடேசுவரன் கவிதைகளில் பெண்மன வெளிப்பாடு | 727-733 |
| 108. | சீ.சிவகுமார் | பதிற்றுப்பத்தில் அழகியல் | 734-739 |
| 109. | பி.வீ.ஸ்ரீதேவி | ஜெயமோகன் புதினங்களில் பொருள்சாராப் பண்பாடு | 740-748 |
| 110. | சுப. தென்றல் | கவிஞர் பழநிபாரதியின் கவிதைகளில் மானுட மேம்பாட்டுக் கருத்தாக்கங்கள் | 749-754 |
| 111. | ச.சுப்புலெட்சுமி | பழந்தமிழ் இலக்கியங்களில் வினையடிவடிவக்கோட்பாடு | 755-758 |
| 112. | இரா.சுப்ரமணியன் | எட்டுத்தொகை அறப்பாடல்களில் அழகியல் | 759-763 |
| 113. | அ.சுகன்யா | பாரதிதாசன் கவிதைகளில் மார்க்சியச் சிந்தனைகள் | 764-767 |
| 114. | ம. சுஜாதா | வணிக அறக்கோட்பாடுகள் - சங்க இலக்கியம் | 768-772 |
| 115. | த. சுஜாதா | சிலப்பதிகாரத்தில் இனவரைவியல் கோட்பாடுகள் | 773-778 |
| 116. | கு.உமாதேவி | பௌத்த பெண் மெய்யியல்: தேரிகாதை | 779-787 |
| 117. | ரா.வி.விஜி | நற்றிணையில் வாழ்வியல் நெறி | 788-791 |
| 118. | பா.வைடூரியம்மாள் | வெள்ளிவீதியார் பாடல்களில் பெண்ணியக் கோட்பாடு | 792-797 |
| 119. | ஏ.வீரப்பன் | பாரதிதாசன் பாடல்களில் பெண்ணியச் சிந்தனை | 798-804 |
| 120. | நா.வெண்முகில | மு.றா.மு. அப்துற் றஹீமின் படைப்புகளில் தன்னையறிதல் திறன் | 805-811 |
| 121. | க.விமலா | சுடுமணல் புதினத்தில் அமைப்பியல் | 812-820 |
| 122. | மோ.யுவராஜ் | வேதாத்திரியார் பார்வையில் மனவளக்கலையின் பெண்ணியல் கோட்பாடுகள் | 821-826 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# சிலப்பதிகாரத்தில் இனவரைவியல் கோட்பாடுகள்

த. சுஜாதா
உதவிப் பேராசிரியர்
அரசுக் கல்லூரி சித்தூர், பாலக்காடு, கேரளா

ஆய்வுச் சுருக்கம்

முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரம் தமிழின் முதல் காப்பியம் என்னும் சிறப்பினை உடையது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் வேட்டுவ வரி, குன்றக் குரவை ஆய்ச்சியர் குரவை ஆகிய மூன்று காதைகளிலும் தொல்குடி மக்களின் வாழ்க்கையினை முழுமையாக விவரிக்கின்றார். இதில் மக்களின் வாழ்வியல் நெறி முறைகள், இசை, கூத்து மரபுகள், சடங்கு மரபுகள்,போன்ற வாழ்வியல் கூறுகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

கலைச்சொற்கள்

குரவை,வெறியாட்டு, கொண்டு நிலைப்பாட்டு, வரிக்கோலம், மரக்கால் கூத்து,கற்கடகக்கை கோர்த்து

## முன்னுரை

இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது சமூகத்தைப் பற்றிய வரைவு என்னும் பொருளைத் தருகின்றது. ஒரு சமூகத்தைப் பற்றி ஆராயும் போது இனவரைவியலாளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய இன்றியமையாத இனவரைவியல் கூறுகளாகிய நில அமைப்பு,சுற்றுச் சூழல், குடியிருப்பு முறை, வழிபாட்டுமுறை, கூத்து போன்ற ஐம்பதிற்கும் மேற்பட்ட சமூகப் பண்பட்டுக் கூறுகள் பற்றி செய்திகள் சேகரித்து எழுதப்படுவதே இனவரைவியல் என்று பக்தவத்சல பாரதி கூறுகின்றார். சிலப்பதிகாரத்தில் வேட்டுவர், குறவர், ஆயர் இன மக்களின் திணை சார்ந்த வாழ்வினை இக் கட்டுரை எடுத்துரைக்கின்றது.

"ஆயர்,வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின்ன வரூஉம் கிழவரும் உளரே" (1)

என்ற நூற்பாவிற்கேற்ப சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை என்பன வேட்டுவர், ஆயர் இன மக்களையும், குன்றக்குரவை குறவர் இன மக்களைக் குறித்தும் விளக்கிக் காட்டப்பெற்றுள்ளன .

## வாழ்விடம்

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும் "(2)

பாலை நிலம் என்பது தனி நிலம் அல்ல, செயற்கையாக உருமாறியது என சிலப்பதிகாரம் உரைக்கின்றது. பாலை நிலத்திற்குரிய குலப்பெயர் எயினர், மறவர், எயிற்றியர், மறத்தியர் எனப்பெறுவர்

கொற்றவை மறவர்களது குல தெய்வம். வேட்டுவர்கள் தங்கள் ஊரினைச் சுற்றி முள் வேலிகளை இட்டிருப்பார்கள். கடம்பு , புன்னை, குரவம் , கோங்கம் போன்ற மரங்கள் நிறைந்திருந்தன. அவ்வூரின் நடுவிலே கூட்டுணவு உண்ணும் ஊர் மன்றம் இருந்தது. அவர்கள் வாழும் குடியிருப்பு எயினக்குடி,சீறூர் என்றழைக்கப்பெற்றது

"மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி" எனப்படும். "சேயோன் மேய மைவரை உலகமும்" (3) என்று தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகின்றது. குறவர் இன மக்களின் குல தெய்வம் முருகன். குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை முறை சிலப்பதிகாரத்தில் மிக அழகாக சித்திரிக்கப் பெற்றுள்ளது. குறிஞ்சி நிலத் தலைவன்: சிலம்பன், வெற்பன் . குலப்பெயர்கள் கானவர், வேட்டுவர், குறவர் என்று அழைக்கப்பெறுவர்.

சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

13-15 பங்குனி 2052
26th - 28th March 2021
ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# *Journal of* Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021
தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம், திருவனந்தபுரம், கேரளா

## பெண் தெய்வங்கள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

முனைவர் ஹெப்சி ரோஸ் மேரி. அ
தமிழ்த்துறைத் தலைவர்

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

17 பகுதி-1
Part -1

சிறப்பிதழ்
**Special Issue**

**13-15 பங்குனி 2052**
**26th - 28th March 2021**

**ISSN : 2321 - 984X**


| | | |
|---|---|---|
| 1. அ. ஹெப்சி ரோஸ் மேரி | நாட்டார் பெண்தெய்வ வழிபாட்டில் தோற்றக்கதைக்கூறுகள் | 1-7 |
| 2. த. விஜயலட்சுமி | கேரளத்தில் கண்ணகி வழிபாடு | 8-13 |
| 3. அ. பிரசில்லா | புலம் பெயர்ந்தோர் வழிபாடும் சாதியக் கட்டமைப்பும் | 14-21 |
| 4. லீமா மெட்டில்டா. அ | நாட்டார் நிகழ்த்து கலைகளில் பெண் தெய்வங்கள் (பாலக்காடு மாவட்டம், கேரளம்) | 22-28 |
| 5. முத்துலெட்சுமி. சு | நாட்டுப்புற தெய்வ வழிப்பாட்டில் செந்திட்டை தேவி | 29-33 |
| 6. அ. ஏஞ்சல் ராணி | கத்தோலிக்கத் திருச்சபையும் மரியாளும் | 34-40 |
| 7. த. அஜி | தமிழ்ச் சமூக மரபில் மணிமேகலா தெய்வம் | 41-46 |
| 8. தி. அல்பா கிரேஸ் | நாட்டுப்புற பெண் தெய்வம் மண்டைக்காடு பகவதி அம்மன் | 47-50 |
| 9. இ. அல்போன்சாள் | வீரமாமுனிவரின் படைப்புகளில் மரியன்னை | 51-56 |
| 10. க. அமரேசன் | மக்கள் மரபில் பிடாரி அம்மன் வழிபாடு | 57-61 |
| 11. தே. அம்சவள்ளி | ஆற்றுப்படையில் பெண் தெய்வங்கள் | 62-65 |
| 12. மு. அமுதா | பெண் தெய்வங்கள் காட்டும் பக்திநெறி | 66-70 |
| 13. ற. ஆனந்த மல்லிகா | மாசற்ற மாசாணியம்மன் | 71-75 |
| 14. க. ஆனந்தராஜன் | பெண்தெய்வ வழிபாட்டில் மதுரை இராக்காயி அம்மன் பெறுமிடம் | 76-82 |
| 15. செ. ஆனந்தி | தீ பாய்ந்த அம்மன் | 83-87 |
| 16. க. அன்பழகன் | அம்மன் தோற்றமும் வரலாறும் | 88-93 |
| 17. செ. அன்பு | "நல்லதங்காள்" என்னும் வாழும் தெய்வம் | 94-97 |
| 18. கே.எஸ். அன்புகலா | நாவல்களில் பெண்தெய்வச் சித்தரிப்புகள் | 98-102 |
| 19. யா. ஆரோக்கிய நாயகம்மாள் | கிறித்தவச் சிற்றிலக்கியங்களில் மரியாள் | 103-107 |
| 20. ப. அருணாதேவி | இலக்கியங்களில் மீவியலாற்றலான அணங்கு வழிபாடு | 108-114 |
| 21. ஜா. அருள் சனிலா | கிறித்தவர்களின் தாய் அன்னை மரியாள் | 115-121 |
| 22. இரா. அருள்மொழி | பெண் தெய்வ வழிபாடு | 122-126 |
| 23. து. அருண்பாண்டியன் | காட்டேரி சிறுதெய்வ வழிபாடும் இறை தத்துவமும் | 127-131 |
| 24. வே. அருட்பாமணி | சகலமும் நல்கும் ஸம்பத்கரீதேவி அல்லது அரச காத்த அம்மன் (வழிபாட்டு மரபுகள்) | 132-134 |
| 25. நீ. பகவதியம்மாள் | வலிகளின் பின்னணியில் வாழ்ந்து சிலையான கருவறைத் தெய்வங்கள் | 135-141 |
| 26. பி. பாலச்சந்திரன் | சக்தி வடிவத்தின் தத்துவக் கோட்பாடுகள் | 142-147 |
| 27. அ. பெனிலா ஜாய் | கண்ணகி வழிபாட்டு தொன்மம் | 148-153 |
| 28. பாரதி ராஜா. வே | ஜெயமோகனின் காமரூபிணி கதையில் யட்சிகளும், இசக்கிகளும் | 154-160 |
| 29. மு. பிருந்தாவனம் | தமிழ் இலக்கியங்களில் தாய்த்தெய்வ வழிபாடு | 161-165 |
| 30. சீ செஞ்சலட்சுமி | செல்லியம்மன் வழிபாட்டு மரபுகள் | 166-171 |
| 31. மு. சென்னப்பன் | தமிழரின் களவொழுக்கத்தில் வெறியாட்டு | 172-175 |
| 32. அ. டெய்சி | நாட்டார் இலக்கியங்களில் பெண் தெய்வமும் வழிபாடும் | 176-180 |
| 33. க. தேவி | நாட்டார் வழிமரபில் சுயம்புவாகத் தோன்றிய பெண் தெய்வங்கள் | 181-185 |
| 34. வி. தேவி | சரபேந்திரர் பூபாலக் குறவஞ்சியில் - பெண் தெய்வங்கள் | 186-189 |
| 35. ந. தனசேகர் | கொல்லிப்பாவை | 190-194 |
| 36. அ. திவ்யா | பெண் தெய்வ தோற்றக் கதைகள் - பேச்சிப்பாறை பேச்சியம்மன் | 195-200 |
| 37. கோ. சாந்தமூர்த்தி | தமிழ் இலக்கியங்களில் பெண் தெய்வ வழிபாடு | 201-205 |
| 38. க.நீ. இளங்கோவன் | செல்லாண்டியம்மன், மதுரகாளியம்மன் வரலாறும் வழிபாடும் | 206-210 |
| 39. சு. பாத்திமா | தமிழ் - மலையாளப் புதினங்களில் பெண் தெய்வ வழிபாடுகள் | 211-217 |
| 40. ச. காயத்ரி | திரௌபதியம்மன் பெண் தெய்வ தோற்ற மரபுகள் | 218-222 |
| 41. ச. கீதா | பெண் தெய்வங்களில் காத்தாயி அம்மன் வழிபாடு | 223-228 |
| 42. கீதா இராமலிங்கம் | இசக்கியம்மன் வழிபாடு | 229-235 |
| 43. க. கிரிவாசன் | மதுரகாளியம்மன் வழிபாட்டில் மரபும் புதுமையும் | 236-240 |
| 44. மா. கோமதி | சித்தர் இலக்கியங்களில் பெண் தெய்வங்கள் | 241-245 |
| 45. சு. கோமதி அழகு | எண்ணெய்க்காரச்சி அம்மன் வரலாறும் வழிபாடும் | 246-252 |
| 46. ச. குருஞானாம்பிகா | இருக்கன்குடி மாரியம்மன் ஆலய வழிபாட்டு முறைகள் | 253-261 |
| 47. செ. லீ. ஹெலன் ஜெபா றோஸ் | தத்துவ நோக்கில் பெண் தெய்வ வழிபாடு | 262-266 |
| 48. பீ. இலக்கியா | முப்பந்தல் இசக்கியம்மன் தோற்றக் கதையும் தற்போதைய நிலையும் | 267-273 |
| 49. வி. இளமதி கனகசுந்தரம் | பெண் தெய்வ வழிபாடு மலர்ந்து வந்த பாதை | 274-281 |
| 50. கு. ஜெயந்தி | அகநூல்களில் முல்லைத்திணையில் பெண்கள் | 282-285 |
| 51. வெ. ஜெயந்தி & என். விஜயலட்சுமி | இறையருள் நாட்டிய பெண் தெய்வங்கள் | 286-290 |
| 52. ஜென்ஸிஸ் குமார். மி. | தாய்த்தெய்வ வழிபாட்டில் வளமைசார் கருத்தாக்கங்கள் | 291-295 |
| 53. ஜென்சி வை.கி | நாட்டார் பெண் தெய்வங்களில் இசக்கியம்மன் வழிபாடு | 296-303 |
| 54. தா. ஜெயஷீலா | சு. தமிழ்ச்செல்வியின் நாவல்களில் பெண் தெய்வ வழிபாட்டு முறைகள் | 304-308 |
| 55. ஜெ.சா. ஜீஜி கிறிஸ்டோபெல் | நாட்டுப்புற வழிபாட்டில் சப்த கன்னிமார்கள் குறித்தான வழிபாடு | 309-314 |
| 56. லூ. ஜோன் சில்வியா பிரேமா | பெண் தெய்வ வழிபாட்டு முறைகளும் மரபுகளும் | 315-319 |
| 57. அ. ஜோதிரவிந்திரன் | பாரதியார் கவிதைகளில் பெண்தெய்வ வழிபாடு | 320-324 |
| 58. அ. கலைச்செல்வி | கதைப் பாடல்கள் காட்டும் கொலையில் உதித்தப் பெண் தெய்வங்கள் | 325-329 |
| 59. இரா. கலைச்செல்வி | அழியாப் பெண்ணினத்தின் மீட்சி (அழியா இலங்கை அம்மன்) | 330-334 |
| 60. கல்பனா. ச & க. கலாவதி | மலசர் பழங்குடியின் மாகாளியம்மன் வழிபாடும் தாய்வழி பண்பாட்டியங்கியலும் | 335-340 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023. Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# தமிழ் - மலையாளப் புதினங்களில் பெண் தெய்வ வழிபாடுகள்

முனைவர் சு. பாத்திமா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை & ஆய்வு மையம்
அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு-678104, கேரளா, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

பெண்தெய்வ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்த சமூகம் திராவிடச் சமூகம். தமிழ் மற்றும் மலையாள மக்களின் பண்பாட்டில் காணப்படும் அம்மன் கோயில் திருவிழாக்களும் வழிபாடுகளும் திராவிடப் பண்பாட்டு மரபிலிருந்து தோன்றியவையேயாகும். பண்டைய திராவிடச் சமூகம் தாய்வழி உரிமையைப் பின்பற்றிய சமூகம் ஆதலின் பெண்தெய்வ வழிபாட்டைக் கடைபிடித்தது. அது காலங்காலமாகப் பல தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இன்று பண்பாட்டுக்கூறுகளுள் பிரிக்கமுடியாத ஒன்றாகத் திகழ்கிறது. அவ்வழிபாட்டு மரபுகள் தமிழ் மற்றும் மலையாள மக்களின் பண்பாடுகளில் அதற்கேயுரிய தனித்தன்மையுடன் இன்றுவரை நிலைநிறுத்தப்படுகின்றன என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்காகும்.

**கலைச்சொற்கள்**

பெண் தெய்வங்கள்- அம்மன் வழிபாடு- பகவதி வழிபாடு- காளி- கொங்கு வட்டாரம்- மலபார் வட்டாரம்

**முன்னுரை**

கேரளம் மற்றும் தமிழக மக்களின் பண்பாட்டில் நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகளே வேரூன்றியிருக்கின்றன. இயற்கையை, தெய்வத்தை மகிழ்வுறச் செய்தால் நாமும் மகிழ்ச்சியுடன் வாழலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாட்டுப்புறமக்கள் சிறுதெய்வ வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். அதனால் படையலிடுதல், கலைத்திறனால் மகிழ்வித்தல், பலியிட்டுச் சாந்திப்படுத்துதல் முதலான வழிபாட்டு முறைகளைக் கையாளுகின்றார்கள் தமிழில் கொங்கு வட்டாரப் புதினங்களான சூர்யகாந்தனின் மானாவாரி மனிதர்கள், சி.ஆர்.இரவீந்திரனின் ஈரம் கசிந்த நிலம், மா.நடராசனின் ஒண்டிக்காரன் பண்ணையம், ப.க. பொன்னுசாமியின் படுகளம் ஆகிய புதினங்களிலும் மலபார் வட்டார மலையாள மொழி எழுத்தாளர்களான எம்.டி.வாசுதேவனின் அசுரவித்து, கோவிலனின் தட்டகம், ஓ.வி விஜயனின் தலமுறகள், சாராஜோசஃபின் ஆதி ஆகிய புதினங்களிலும் பெண் தெய்வ வழிபாடுகள் குறித்தான பதிவுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

வழிபாடு என்ற சொல்லானது 'வழிபடு' என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும். இச்சொல்லானது வழியிற் செல்லுதல், பின்பற்றுதல், வணக்கம், பூசனை என்று நான்கு பொருளில் வழங்கிவருகிறது. எனினும் இக்காலத்தில் வழிபாடு என்றாலே இறைவழிபாடாகவே கருதப்பட்டு வருகிறது. இதில் நாட்டுப்புற வழிபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

நாட்டுப்புற வழிபாடுகள் சடங்குகளோடும் நம்பிக்கைகளோடும் விழாக்களோடும் தொடர்புடையன. மட்டுமின்றி அவை பல்வேறு மூலங்களைப் பின்னணியாகக் கொண்டு காலங்காலமாகப் பல தன்மைகளில் நடைபெற்று வரக் கூடியனவாகவும் உள்ளன என்பதைக் கொங்கு-மலபார் வட்டாரப் புதினங்கள் உணர்த்துகின்றன.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள கொங்கு வேளாளச் சமூக மக்கள் வேளாண்மையோடு தொடர்புடைய அனைத்து நிகழ்வுகளையும் வழிபாட்டோடு இணைத்தே



REJI T
2024.05.02
14:39:56 +05'30'